# மறை ஞானப்பேழை

**சத்தியம் வந்துவிட்டது !**

**அசத்தியம் அழிந்து விட்டது !**

**நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !**

**September 2024 செப்டம்பர் 2024**

Retail Selling Price 25

Page 1

Volume - 16, Issue - 7

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித்**

**யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **300/-** |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **3000 /-** |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**

அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


முஹர்ரம் - ஸஃபர்

**செப்டம்பர் 2024**

**Volume - 16 Issue -7**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்
திருமறைப் பக்கம்.
அமுத மொழிகள்.
உமர் (ரலி) புராணம் – நயம்.
ஏகத்தின் அருட்சுடர்
அண்ணல் எங்கள் ஆருயிர்
மனிதம் வெல்லும்...
காது கேட்காதா?
அவனிபோற்றும் அண்ணலார்
வருமுன் காக்க...
சற்குரு சரித்திரம்
பல்லக்குத் தம்பி வலீ
ஏழழகு! அது பேரழகு!
மதுரஸா விழா உரைகள்... (தொடர்)
மீலாதுன்னபி விழா!
மற்றும் பல்சுவைச் செய்திகள்

# தொட்டுத் தொடருவோம்!

ரபீஉல் அவ்வல் மலர்கிறது. அது வரும்போதே மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் முரீதுகளாகிய எமக்கு சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் பிரிவுத் துயரையும் சுமந்து வருகிறது.

18 வருடங்களாக மீலாது கந்தூரி விழாவை சிறப்பாக நடத்திக்காட்டி கண்முன்னே உலாவந்த வாப்பா நாயகம் அவர்கள் கண்மறைவாக துயிலச் சென்றுவிட்டார்கள்.

விழாவுக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னே திட்டமிடுவது என்ன? பார்ப்போரிடமெல்லாம் – தொலைபேசியில் பேசுவோரிடமெல்லாம் மீலாது கந்தூரிக்கு அவசியம் வந்துவிடவேண்டும் என்று அழைப்பதென்ன? பிள்ளைகள் வந்து தங்குவதற்கு வசதியான தங்குமிடத்தைத் தேர்வு செய்வதென்ன? விருந்துக்கான திட்டமிடல் என்ன? அது அதற்கு பொறுப்பாளர்களை நியமிப்பதென்ன? தங்கள் இல்லத்தை வண்ணப் பூச்சுகளால் புதுப்பிப்பதென்ன? இன்ன பேச்சாளர்கள் – பாடகர்கள் – வரவேண்டுமெனத் தீர்மானிப்பதென்ன?

ஸுப்ஹானல்லாஹ். இவையெல்லாம் ஷைகு நாயகம் அவர்கள் தங்கள் பாட்டனார் மீது வைத்திருந்த அளவில்லா அன்புக்கும் மரியாதைக்கும் சாட்சியாக இருந்தன.

விருந்தினர் வந்துவிட்டால் இரவு பகல் ஓய்வில்லாமல் கவனம் செலுத்தி கவனித்த மாண்பை என்னென்று சொல்வது? அவர்கள் அன்பில் நனையாத ஒரு முரீதை யாரும் காட்ட முடியாது. நினைவுகளையும் கண்ணீரையும் எமக்களித்து நிம்மதியாக அவர்கள் உறங்குகின்றார்கள்.

ஆனாலும் அதிலும் ஒரு மகிழ்ச்சியை மிச்சம் வைத்துச் சென்றுள்ளார்கள். அதுதான் அவர்களை நகலெடுத்த, திருப்பேரர் யாஸீன் அலி நாயகத்தை பரிசாகக்கொடுத்துச் சென்றது. பரிசாக அளித்தது மட்டுமல்ல. தாங்கள் நடத்திய மீலாது கந்தூரியை சிறப்பாக நடத்தவேண்டும் என்ற பொறுப்பையும் கொடுத்துச் சென்றுள்ளார்கள்.

இளைய நாயகம் அவர்கள், வாப்பா நாயகம் அவர்கள் விட்டுச் சென்றதையெல்லாம் அழகாகத் தொடர்கின்றார்கள். தொடருவார்கள்.

என்றும் நாம் அவர்களைத் தொடர்ந்து வாப்பா நாயகம் அவர்களின் லட்சியக்கனவுகளை நனவாக்குவோம்.

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**
**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



*“ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் புகழ வேண்டாம்” எனச் சொல்லப்படும் இக்கால கட்டத்தில் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அதிகம் புகழ்வதும் அவர்கள்மீது காவியங்களைப் படைப்பதும் - ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் புகழ்பாடும் கூட்டங்களுக்குச் செல்வதும் நமது வாழ்வின் முக்கிய அம்சமாகக் கொள்ள வேண்டும். மேன்மையும் சிறப்பும் உண்டாகும்.*

***– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –***

# ஜமாலிய்யா தோட்டத்தில்

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை, அவர்கள் ஹக்கின் பரிபூரணத் தோன்றல் எனும் உட்கருத்துக்காகவும் அவர்களின்றேல் பரிபூரண பரிசுத்த சாந்தமான நல்வாழ்வு மானிடர்கள் எய்தி இருக்க மாட்டார்கள் என்பதற்காகவும் அவர்களின் அருங்குணம், வீரம், செயலாற்றும் தன்மை போன்ற மற்ற எண்ணற்ற நற்காரியங்களுக்காகவும் எம் உள், வெளி இரகசியங்கள் கொண்ட பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்பதற்காகவும் அவர்களை நான் உள்ளார நேசிக்கின்றேன்.

ரபீஉல் அவ்வல் மாதம் பிறந்ததும் உலகமெங்கும் வாழும் மக்கள் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். ரசூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிறந்தது முதல் மறையுமளவுள்ள எல்லா விஷயங்களையும் காரண காரியங்களை எடுத்துக்காட்டி கதைக்கிறார்கள். சொற்பொழிவாற்றுகிறார்கள். மேடை தோறும் பேசுகிறார்கள்.

ஆனால்,

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றி அவர்களால் அறிய முடியவில்லை. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் யார் என்பதை அறியவில்லை.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதை நாம் செய்கிறோமா என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொல்லியவை அனைத்தும் உண்மைதான் என்பதையும் அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதை பிழை எனக்கூறக்கூடிய கூட்டம் (இஸ்லாத்தில்) ஒன்றும் இருக்கின்றது. அந்தக் கூட்டத்திற்கு ரபீஉல் அவ்வல் பிறக்கும்போதே பைத்தியம் பிடிக்கும், கடிப்பார்கள், உதைப்பார்கள், எல்லாம் நடக்கும்,



கொய்த மலர்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

بِئْسَمَا اشْتَرَوْا بِهٖٓ اَنْفُسَهُمْ اَنْ يَّكْفُرُوْا بِمَآ اَنْزَلَ اللّٰهُ بَغْيًا اَنْ يُّنَزِّلَ اللّٰهُ مِنْ فَضْلِهٖ عَلٰى مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ

அல்லாஹ் அவனுடைய அடியார்களிலிருந்து அவன் விரும்பிய ஒருவர் மீது, அவனுடைய கொடையிலிருந்து, அல்லாஹ் (தனது வேதமாகிய குர்ஆனை) இறக்கியதற்காகப், பெருமையால், அல்லாஹ் இறக்கிய (அந்த குர்ஆன் வேதத்) தை மறுக்கிறதினிமித்தம் அவர்கள் தம்மையே (விற்று) எது கொண்டு அதை வாங்கினார்களோ அது கெட்டு விட்டது.

فَبَآءُوْ بِغَضَبٍ عَلٰى غَضَبٍ

அவ்வாறு தம்மால் தம்மையே கெடுத்துக் கொண்ட இவர்கள் அல்லாஹுவின் கோபத்திற்கு மேல் கோபத்தில் ஒதுங்கினார்கள்.

[(அல்லாஹ்) அவனுடைய அடியார்களிலிருந்து விரும்பிய ஒருவர் (தம்மைத் தேர்ந்தெடுத்து அவர் பால் தனது உபகாரத்தினின்று அல்லாஹ் (தனது குர்ஆன்) வேதத்தை இறக்கியதற்காகப் பொறாமையால் அல்லாஹ் இறக்கிய (அந்த குர்ஆன்) வேதத்தை மறுக்கிறதினிமித்தம் அவர்கள் தம்மை (விற்று) அது கொண்டு எதை வாங்கிக் கெண்டார்களோ அது கெட்டுவிட்டது. அவ்வாறு தம்மால் தம்மையே கெடுத்துக் கொண்ட இவர்கள் அல்லாஹுவின் கோபத்திற்குமேல் கோபத்தில் ஒதுங்கினார்கள்.]

وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ مُّهِيْنٌ ۝ ٩٠

இம்மறுப்போருக்குக் கேவலமான வேதனையுண்டு.

وَ اِذَا قِيْلَ لَهُمْ اٰمِنُوْا بِمَآ اَنْزَلَ اللّٰهُ

அல்லாஹுதஆலா இறக்கிய (இந்த குர்ஆன்) வேதத்தில் நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று அவர்களிடம் சொல்லப்பட்டபோது.

قَالُوْا نُؤْمِنُ بِمَآ اُنْزِلَ عَلَيْنَا

அவர்கள் நம்மீது (முன்னர்) இறக்கப்பட்ட (துவ்ராத் வேதத்)தை நாம் நம்பிக்கை கொள்வோம் என்று கூறினார்கள்.

وَيَكْفُرُوْنَ بِمَا وَرَآءَهٗ ۗ

அதற்குப் பின்னால் உள்ள (குர்ஆனை) மறுக்கிறார்கள்.

وَهُوَ الْحَقُّ مُصَدِّقًا لِّمَا مَعَهُمْ ۗ

அவர்களிடத்துள்ள (வேதத்)தை உண்மைப் படுத்துகிறதாக உள்ள (குர்ஆனெனும்) அதுவே சத்தியமானது.

قُلْ فَلِمَ تَقْتُلُوْنَ اَنْۢبِيَآءَ اللّٰهِ مِنْ قَبْلُ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۝ ٩١

நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயிருப்பின் (இதற்கு) முன்வந்த, அல்லாஹுவின் தூதர்களை எதற்காக நீங்கள் கொலை செய்தீர்கள் என (நபியே) நீங்கள் (அவர்களிடத்துக்) கேளுங்கள்.

وَلَقَدْ جَآءَكُمْ مُّوْسٰى بِالْبَيِّنٰتِ

திடமாக உங்களிடத்து மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தெளிவான ஆதாரங்களைக் கொண்டு வந்தார்கள்.

ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِنْۢ بَعْدِهٖ

மேலும் அவ்வேதத்திற்குப் பின்னும் நீங்கள் காளைக் கன்றினை (த் தெய்வமென) ப் பற்றிக் கொண்டீர்கள்.

وَاَنْتُمْ ظٰلِمُوْنَ ۝ ٩٢

இன்னும் (அதனால்) நீங்கள் வம்பர்களானீர்கள்.

---

## அல்லாமா அப்துல் ஹமீது பாகவி அவர்களின் மொழி பெயர்ப்பு

90.(இந்த குர்ஆனை தங்கள்மீது இறக்காமல்) அல்லாஹ் தன் அடியார்களில் தான் விரும்பியவர்கள் மீது தன் அருளை இறக்கிவைத்ததைப் பற்றி பொறாமை

கொண்டு, அல்லாஹ் இறக்கிவைத்த (இதையே நிராகரிப்பதன் மூலமாக அவர்கள் தங்களுக்காக எதை வாங்கிக் கொண்டார்களோ அது (மிகக்) கெட்டது. (குர்ஆனைத் தங்கள் மீது இறக்கவில்லையென்ற) கோபத்தினால் (அதை நிராகரித்து அல்லாஹ்வின்) கோபத்தில் அவர்கள் சார்ந்துவிட்டார்கள். ஆதலால் (அந்) நிராகரிப்பவர்களுக்கு இழிவுதரும் வேதனையுண்டு.

91. அல்லாஹ் இறக்கி வைத்த (இ) தை நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள் என அவர்களுக்குக் கூறப்பட்டால் எங்கள் (நபிமார்கள்) மீது இறக்கப்பட்டவற்றை (மட்டுமே) நம்பிக்கை கொள்வோம் எனக் கூறி அவற்றைத் தவிர உள்ள இ(ந்)த(க் குர்ஆ)னை நிராகரித்து விடுகிறார்கள். ஆனால், இதுவோ அவர்களிடமுள்ள (தவ்றாத்) தை மெய்யாக்கி வைக்கின்ற உண்மையா (ன வேதமா) க இருக்கிறது. (நபியே. அவர்களை நோக்கிக்) கேட்பீராக (உங்கள் வேதத்தை) உண்மையாகவே நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால் (உங்களில் தோன்றிய) அல்லாஹ்வுடைய நபிமார்களை இதற்கு முன் நீங்கள் ஏன் கொலை செய்தீர்கள்?

92. (இஸ்ராயீலின் சந்ததிகளே.) நிச்சயமாக மூஸா உங்களிடம் தெளிவான அத்தாட்சிகளையே கொண்டு வந்திருந்தார். ஆனால் நீங்களோ அதற்குப் பின்னும் ஒரு காளைக் கன்றை (த் தெய்வமாக) எடுத்துக் கொண்டீர்கள். (இவ்வாறே ஒவ்வொரு விஷயத்திலும்) நீங்கள் வரம்பு கடந்த) அநியாயக்காரர்களாகவே இருக்கிறீர்கள்.

## தர்ஹா கமிட்டி கூட்டம்

சங்கைமிகு செய்குநாயகம் அவர்களின் புனித தர்ஹா ஷரீப் கட்டட கமிட்டிகூட்டம் 23.08.24 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 9 மணிவரை சங்கைமிகு இளையநாயகம் அவர்களின் தலைமையில் இணையதள வாயிலாக நடைபெற்றது. சங்கைமிகு திருக்குடும்பத்தார், மற்றும் உலகின் அனைத்து சபையிலிருந்தும் கலீபாக்கள் முரீதுகள், ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை நிர்வாகிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். திண்டுக்கல் அப்பாஸ் ஷாஜஹான் பி.எஸ்.ஸி. எம்.பி.ஏ. ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் கூட்டத்தை நெறிப்படுத்தினார்.

இளையநாயகம் அவர்கள் சிறப்பான ஆசியுரை –கருத்துரை வழங்கியபின்,தர்ஹா வரைபடக் காணொளி ஒளிபரப்பப்பட்டது. அதன்பின், கலீபா. பொறியாளர். எம்.ஜே.முஹம்மது இக்பால் பி.இ.எம்.பி.ஏ.ஹக்கிய்யுல் காதிரிய் , கலீபா. சிங்கப்பூர் வி.எஸ். நிஜாமுத்தீன் பி.இ.ஹக்கிய்யுல் காதிரிய், கலீபா. ஆலிம் புலவர் ஹக்கிய்யுல் காதிரிய்,, குவைத் அப்துல் ஹமீத் பாகவி ஹக்கிய்யுல் காதிரிய், பொறியாளர் ஹைதர் நிஜாம் பி.இ. ஹக்கிய்யுல் காதிரிய் ,ஜனாப். எஸ்.ஐ. தவ்லத் ஹக்கிய்யுல் காதிரிய் ,, மற்றும் முக்கிய நிர்வாகிகள் முக்கிய கருத்துகளை முன்வைத்தனர்.

இளைய நாயகம் அவர்கள் தங்கள் உரையில், தர்ஹாவுக்கென தனி வங்கிக்கணக்கு திறக்கப்படும். நன்கொடையாளர்கள் அதில் தர்ஹா காணிக்கைகளை செலுத்தி தங்களுக்கு அவசியம் தகவல் தெரிவிக்க வேண்டுமென்றும், மேலும் கணக்குகள் வெளிப்படையாக அனைவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் செயல்படுத்தப்படும் என்றும், தர்ஹா பிரம்மாண்டமாக பிரமாதமாக அலங்காரமாக வரலாற்று சிறப்புக் கட்டடமாக விளங்கும் என்றும் அதற்கு ஏழு நுழைவாயில்கள் இருக்கும், அதற்கான சிறப்புக் காரணங்கள் இன்ன..இன்னவெனவும் கூறி, இதற்காக உழைப்பவர்களுக்கும், நன்கொடையளிப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் அருளும், அண்ணலார் ஆசியும், ஷைகு நாயகம் அவர்களின் கருணைப் பார்வையும் எப்போதும் துணைநிற்குமென அருளுரை வழங்கினார்கள்.

முன்னதாக, மௌலவி.அல்ஹாஃபிழ். V.M. முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் கிராஅத் ஓதினார்கள். கலீபா. ஆலிம் புலவர் S. ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள் நபிப்புகழ்ப்பா பாடினார்கள். நிகழ்வின் மத்தியில், துபை சபையைச் சேர்ந்த அனஸ் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் இயற்றி, Er. அஹ்மது இம்தாதுல்லாஹ் குழுவினரால் இசையமைத்து வீடியோ அமைக்கப்பட்ட குரு புகழ்ப் பாடல் ஒளிபரப்பப்பட்டது. தர்ஹா கட்டுமானப் பணிகளுக்கான தேவை, பங்களிப்புகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு, நன்றி நவிழல் மற்றும் ஸலாவத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

தர்ஹா நன்கொடையாளர்கள் தங்களது கொடைகளை அறிவிக்கலாம் என்று அறிவித்தவுடன் மழை பொழிந்ததுபோல காணிக்கைகள் பொழிந்தது. அல்லாஹ் இதில் பங்கெடுதத– இனியும் பங்கெடுக்கவிருக்கும் அனைவருக்கும் தனது கஜானாவிலிருந்து ஒன்றுக்குப் பத்தாக அருள்வானாக! ஆமீன்!

---

## வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்துவிட்டீர்களா?

**மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 20980100025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

***பெயர் – முகவரி*** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

## திருக்குறள்

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு (261)**

தமக்கு வந்த துன்பத்தைப் பொறுத்தலும், பிற உயிருக்குத் தாம்துன்பம் செய்யாமலிருத்தலும் ஆகிய அவ்வளவினதே தவத்திற்குள்ள வடிவமாகும்.

---

**பொய் குறளைவெளவலழுக்காறிவை நான்கு**
**மையந்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பி**
**னையம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்**
**தெய்வமுஞ் செற்றுவிடும் .** *-ஆசாரக்கோவை-*

பொய்யும் கோளும் பிறர்பொருளை அபகரிக்கவேண்டுமென்னும் ஆசையும் பிறர் ஆக்கத்தில் பொறாமையும் அகிய இந்நான்கினையும் சந்தேகம் நீங்கிய அறிவுடையார் நினையார். அப்படி நினைப்பாராயின் அவரை பிச்சை புகுவித்து அரிய நரகத்தில்செலுத்திவிடும். தெய்வமும் கெடுத்துவிடும்.

---

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**1 முஹர்ரம்**

| பிறை | |
|---|---|
| 1 | ஹிஜ்ரி ஆண்டு பிறப்பு |
| 4 | ஹஸன் பஸரீ (ரலி) உதயம் |
| 5 | பாபா ஃபரீதுத்தீன் கன்ஸெஷக்கர் (ரஹ்) மறைவு |
| 6 | ஜகரிய்யா (அலை) மறைவு |
| 10 | இமாம் ஹுஸைன் (ரலி) பிரணாத்தியாகம், ஆஷூரா தினம் |
| 18 | இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) மறைவு |
| 29 | ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) மறைவு |

**2 ஸஃபர்**

| | |
|---|---|
| 5 | ஸதக்கத்துல்லா அப்பா (ரஹ்) மறைவு |
| 10 | கமுதி முஸாபிர் வலி (ரஹ்) உரூஸ் |
| 14 | காயல் தைக்கா சாஹிபு (ரஹ்) மறைவு |
| 17 | கொடிக்கால் பாளையம் அப்துல் மஜீது ஸூஃபி (ரஹ்) உரூஸ் |
| 28 | இமாம் ஹஸன் (ரலி) ஷஹீது |

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



## அண்ணலே! அற்புதமே!

பன்னிரண்டாம் பிறையினில் அரசர் கோமான் எம்பிரான் அகில நாதர் உலகினில் திருவவதாரஞ் செய்தருளினார்கள். உலகத்தில் நிலை பெற்றிருக்கும் உயிர்களுக்கெல்லாம் அற்றைத்தினம் அறிவு – புத்தி – ஞானம் பிறந்த நாளாகும். மண்ணுயிர் எனப் பாடபேதங்கொளின் மண்ணிலே வதியும் அண்டசராசரங்கள் அனைத்துக்கும் அறிவு, ஞானம், புத்தி பிறந்த நாள் எனக்கொளின் மிகையன்று.

வஞ்சகர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்த அம்மக்கமா நகர்தனில் சேற்றிற் செந்தாமரை அலர்ந்தாற் போல் அனைவருக்கும் அனைத்திற்கும் கதியாகிய எம்பெருமானார் பிறந்தநாள் இதே.

கதி : பாவிகள் தங்கள் பாபங்களை நீக்கி விமோசனம் அடைதற்குச் செல்லும் புகலிடம். எம்பெருமானாரே எல்லாவற்றிற்கும் கதி.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவவதாரஞ் செய்தருளிய அப்போழ்து வறுமையில் வாடி வாழ்விழந்து வரண்டிருந்த நாடு வெப்பம் தணிந்து குளிரடைந்து வளமிகுந்து தோன்றிற்று.

வரண்டிருந்த ஆறுகளெல்லாம் கடல் நீர் நிறைந்தாற் போன்று நிறைந்து இருகரைகளும் புரண்டோடத் தொடங்கின.

அரசர்க்கரசரான எம்பிரான் பிறந்த போது பாரசீகத்தில் அணையாது எரிந்து கொண்டிருந்த தீ அணைந்து போயது எம்பிரான் புதுமையே.

குளிர்ந்த குணமுடைய திங்கள் போன்ற எம்பெருமானார் இவ்வுலகத்தினிலே உதயஞ் செய்தமையால் மவுட்டியக் கொள்கையுடையோர் வணங்கிவந்த சிலைகளெல்லாம் அசைந்து கீழே விழுந்தன.

# அமுத மொழிகள்

அண்ணலார் பிறந்த வன்று கிஸ்ரா மாளிகை வல்லவனருளால் மண்ணில் வீழ்ந்தழிந்தது.

குற்றமே இல்லாத மன்னர் மன்னராம், எம்பிரானின் குழந்தைப் பருவத்திலே அவர்களைப் பாதையிற் கூட்டிச் செல்கையில் எல்லாப் பொருள்களும் அவர்களுக்கு வாழ்த்து கூறுமாம். ஸலாம் சொல்லுமாம்.

சந்திரனைப் பிளந்த மாநபி. மண்ணிலே அவதாரஞ் செய்தருளிய அழகுமிக்கச் சந்திரன். அல்லது பேரறிவு, அரசர்களுக்கெல்லாம் மிக்கப் பேரரசர், குர்ஆனாகிய மறையைக் கொண்டுவந்த சீர்மையான நபி.

சுத்தமான பிரபையோடு பிரகாசித்து மறைந்த சூரியனை வானத்தின் மேலே வித்தைபோலத் திரும்பவும் வரவழைத்தார்கள் மாநபி.

சேற்றினிலே காற்பதிந்த தன்மைத்தாய்க் கற்பாறை மேற் காற்பதித்த அகில நாதர். அருள் மிக்கத் தலைவர், எம்நபி.

நிறைந்த உள்ளத்தையுடைய நபிகள் நாயகம் அவர்கள், அவர்களின் மலர் போன்ற பாதங்களை மணல் நிறைந்த பூமியில் வழக்கம் போல் வைத்தபோது அந்தத் திருப்பாதங்கள் பூமியில் பதியவில்லை.

எம்பெருமானார் அவர்களின் விரல்களினிடைகளி லிருந்து நீர்வேகமாக வழிந்தோட, ஆங்கண் திரண்டு நின்ற மக்கள் அந்நீரில் வுளூஉச் செய்தனர்.

ஒருவரே உண்ணப் போதுமான உணவைக் கருணையே வடிவான எம் பெருமானார் அவர்கள் அங்கு நின்ற அனைவருக்கும் தங்கள் திருக்கரங்களாலே மற்றவர்கள் காணும் வண்ணமாயீந்தனர்.

பார்வையே இல்லாத கண்களிலே பேரரசர் எம் பெருமானார் உமிழ்ந்து நுணுக்கமான பார்வையே உண்டு பண்ணினார்கள்.

ஒப்புரவற்ற எம் பெருமானார் உப்புக் கிணற்றில் துப்பியபோது அவ்வுப்பு நீர் குறையில்லாத இனிய நீராயது.

கருணைப் பெருவள்ளல் எம் பெருமானார் அவர்கள் காலினாலுதைத்த போது நீர் மேலெழுந்தது. அவ்வூற்றோ மீறிப்பாயவு மாயது.

# அமுத மொழிகள்

இறந்த சிறுவர் இருவரும் உயிர் பெற்றெழுந்திட இறையை இறைஞ்சினார்கள். அப்போது இருவரும் உயிர் பெற்றெழுந்தனர். இஃது எம்பெருமானாரின் அற்புதம்.

அரசர் கோமான் எம் பெருமானார் இறைவனை இறைஞ்சிய போது கொலையுண்டிறந்த கிருத்தவன் உயிர்பெற்றெழுந்தனன். கொலைஞனையும் சொல்லிக் காட்டினன். இதுவும் குருகளாரின் அற்புதமே.

கறி சமைக்கப்பட்ட ஆட்டின் கற்றை யெலும்பினில் மறை நாதர் திருக்கரத்தினை வைத்தபோது இறை வன்மையால் ஆடெழுந்து நின்றது.

நாயகம் அவர்களின் நற்பெயரினைக் கூறிடினே அழிந்து போன எலும்பும் உயிர்பெற்றுவிடும். இதுவும் நாயகம் அவர்களின் அற்புதமே.

நாயகம் அவர்கள் மண்ணினாற் குருவி செய்தார்கள். மண்ணிலதனைப் போட்டார்கள். அது நுண்ணிய உயிரைப் பெற்றது. ஆகாயத்திற் பறந்தது.

சூரியனின் கரிக்கின்ற கடுமையான கிரணக் கற்றைகளைக் கருணை வள்ளல் நடந்து செல்லும் போது, முகில்களெல்லாம் மேலெழுந்து மறைத்து நிழற்றின. அதுவே மாண்பு.

முகில்கள் கூடி மூடிமறைத்த முகிற்குடையில், பாதலம், பூதலம், மீதலம் ஆகியவற்றின் அண்ணல் பெருமானார் மகிழ்ந்து வந்த புதுமையை மண்ணும் சொல்லி மகிழும் விண்ணும் சொல்லி மகிழும்.

மறையைக் கொண்டுவந்த பெருமானார் நபிகள் நாயகம் அவர்கள் வரும் போதும் போகும் போதும் வெயிலினைக் குடைபோல் மறைத்து வந்த மேகத்தினது மாண்பைத்தானும் சொல்ல வியலுமோ.

விரிந்த பிரபையைப் பரப்புஞ் சூரியனின் ஒளியினைவிட மிகுந்த சோதியினையுடைய பெருமானாரின் அருமையான நிழற்றரையினில் அன்று மின்றும் விழவில்லை.

அனைவருடனும் அன்பு கொண்ட பெருமானார் தங்கள் திருக்கரந்தனை அநாதைக் குழந்தைகளின் தலைகளில் விருப்புடன் வைக்குங்கால் அத்திருக்கரம் வைக்கப்பட்ட தலைகளில் திருக்கரத்தின் நறுமணம் இவர்ந்து பரிமளிக்கும்.

(அற்புத அகில நாதர்– நூலிலிருந்து)

படித்தேன்
பகர்கிறேன்.

உள்ளம் கவரும்

(கலீபா. ஆலிம் புலவர்)

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**கற்சிலையை வேண்டுவர் காரியமே சீர்த்திலையேல்
பற்பழியுஞ் செப்புவர் பற்றியே - இற்றுவர்
கற்றவ ராயினுங் கற்றில ராயினும்
பற்றுவது பொய்யாமே பார்.**

**பொருள் :**

கற்றவராயினும் கற்றில ராயினும் கற்சிலையைத் (தேவை கேட்டு) வேண்டுவர். (அவ்வாறு வேண்டிக் கொண்ட) காரியம் நடக்க வில்லை யானால் அச்சிலையின் மேற் பலபழிகளையும் சொல்லுவர். அதனைப் பிடித்து ஒடிப்பர். இவ்வாறு சிலைமேற் பற்றுதல் வைத்தலே பொய்யாகும் பார்.

இறையாலயமாம் கஃபாவில் 360 சிலைகளை வைத்து நாளுக்கொரு சிலையை வணங்கி ஆண்டு முழுதும் பொய்மைக்குத் தலை சாய்த்து வந்தார்கள். மக்கத்து மக்கள் இறைவனே இல்லையெனக் கூறும் கடவுள் மறுப்பாளர் அல்ல. இறைவனுக்கு உருவம் கற்பித்து அதை சிலையாய்ச் செய்து வணங்கினர். அவர்கள் பிரயாணம் புறப்பட்டால் சமையல் கூட்டுவதற்கு மூன்று கல்லும் கும்பிடுவதற்கு ஒரு கல்லுமாக நான்கு கற்களுடன்தான் பிரயாணம் செய்வர்.

அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு நேர்ச்சை செய்து அவர்களின் வேண்டுதல் நிறைவேறினால் அந்த தெய்வங்களுக்குப் படையலிட்டு உற்சாகமாகப் பணிந்து கொண்டாடுவர். வேண்டுதல் நிறைவேறாவிட்டால் அந்த தெய்வங்களின் பாடு திண்டாட்டம்தான். ஒரே ஏச்சு பேச்சுதான். வாழ்த்திய வாயே வசை பாடித்தீர்த்துவிடும். திட்டினாலும் பரவாயில்லை அந்த சிலைகளை கீழே போட்டு உடைத்து தங்களின் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வர்.

இது பாமரர்கள் செய்தாலும் பரவாயில்லை. கொஞ்சம் எழுத்தறிவு பெற்ற, பல ஊர்களுக்கும் சென்று பட்டறிவுபெற்றவர்களும் இவ்வாறேதான் நடந்து கொள்வர். அவர்கள் அதனை உடைக்கும்போதும் அவை பேசுவதில்லையே என்ற அறிவும் அவர்களிடம் இராது.

# ஏகத்தின் அருட்சுடர்

கலீபா. அட்வகேட். ஏ.என்.எம்.லியாகத்அலி பி.எஸ்.ஸி.பி.எல்.
ஹக்கிய்யுல் காதிரி. மதுக்கூர்.

ஆன்மிகப் பேரரசர் அண்ணல் அவ்ன் நாயகம்
கன்னல் மொழி பேசும் கனிவான கலீல் தாயகம்
இல்லையென்ற நிலையதுவும் இல்லையென்று தானுரைத்தார்
இல்லாதிருந்ததும் இல்லாதிருப்பதும் இறைநிலை என்றுரைத்தார்
ஏக உள்ளமையே தௌஹீதின் தெளிவென்றார்
அண்டமதாய் நின்றிலங்கும் ஏகத்தின் அருட்சுடராம்
அட்சரம் ஷரம் கடந்த அமாவென்னும் மூலவராம்
லா தஅய்யுனான நலமான உத்தமராம்
ஏகத்தின் முழுநிலையாம் எல்லாமாயும் இருப்பவராம்
நபி நாயத்தின் எழிலான முழுமையதாம்
கனிவான எங்கள் யாஸீன் அலி நாயகத்தின் முன் வந்த முழுப்பதிப்பாம்
வெட்டவெளியை மெய்யாகக் கொண்டவராம்
வேதங்கள் அத்தனையுமே தன்னில் கண்டவராம்
எவருடன் நாமிருந்தோமே அவர்களாகவே ஆகிடுவோம்
அகிலத்தின் அருட்கொடையாம் அண்ணல்நபி நாயகத்தின் அருள்மொழி
அவ்ன் நாயகம் அடைக்கலம் நாமாகிவிட்டால்
அவர்களன்றி வேறில்லை என்றாகும்
அவர்களுடனே நாம் உறைந்து வாழ்ந்திடுவோம்.

## சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் நினைவுக் களஞ்சியம்.

ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் முயற்சியில் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை வெளியீடாக சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் யாத்த நூற்களின் திறனாய்வுக்கட்டுரைகள், அவர்களின் உயர்தனிச்சிறப்பு, அவர்களின் சாதனைகள் ஆகியன பற்றி அறிஞர்களின் கருத்தோவியங்களோடு தயாராகிவருகிறது. இன்ஷாஅல்லாஹ் அவர்களின் முதலாம் ஆண்டு உர்ஸ்-கந்தூரி நாள் அன்று வெளியிடப்படும்.

முரீதுகள் தங்களின் அனுபவங்களை கட்டுரைகளாக அனுப்பலாம்.

தொடர்புக்கு: கலீபா. ஆலிம் புலவர். 994457165

# அண்ணல் எங்கள் ஆருயிர்!

பெருமானாரின் அவைக் கவிஞர் ஹஸ்ஸான் பின் தாபித் (ரலி) அவர்கள் பெருமானாரைப் பாடும்போது

مَاإِنْ مَدَحْتُ مُحَمَّدًا بِمَقَالَتِي
لٰكِنْ مَدَحْتُ مَقَالَتِي بِمُحَمَّدٍ

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிப் பாடியதால் எனது வார்த்தைகள் தான் புகழ் பெறுகின்றன என்று புகழ்ப்பா பாடுகிறார்கள்.

**ஹழ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**

مَارَأَيْتُ شَيْئًا اَحْسَنَ مِنْ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
كَأَنَّ الشَّمْسَ تَجْرِيْ فِيْ وَجْهِهِ

ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட மிக அழகு நிறைந்த எதையும் நான் பார்த்ததேயில்லை. சூரியன் அவர்கள் முகத்தில் தவழ்வதைப் போல இருக்கும். (நூல் : ஷமாயிலே திர்மிதி)

“எதையும்” என்ற வார்த்தையின் மூலம் மனிதர்கள் மட்டுமின்றி பெருமானாரை விட வேறு எந்தப் பொருளும் அழகானதாக இல்லை என்பதை தெரிவிக்கப்படுகிறது.

**ஹழ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுவதாவது :**

வானத்தில் மேகமூட்டமில்லாத பௌர்ணமி நாளன்று நான் வானிலே ஒளிவீசிக் கொண்டிருந்த சந்திரனைப் பார்த்தேன். பின்னர் என் மடியிலே படுத்திருந்த அண்ணலாரின் அழகிய வதனத்தையும் பார்த்தேன். இரண்டையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தேன். இறுதியில் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே சந்திரனை விட அதிக பிரகாசமுள்ளவர்களாகவும் பேரழகு படைத்தவர்களாகவும் இருக்கக் கண்டேன். (நூல் : திர்மிதி)

**ஹழ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.**

நான் ஸஹருடைய நேரத்தில் ஆடையை தைத்துக் கொண்டிருந்தேன். அப்போது என் கையிலிருந்த ஊசி தவறி கீழே விழுந்து விட்டது. அதை நான் தேடிப் பார்த்தும் கிடைக்க வில்லை. அச்சமயத்தில் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் உள்ளே வந்தார்கள். அவர்களின் முகத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்த பிரகாசத்தால் ஊசி விழுந்த இடத்தை நான் கண்டு கொண்டேன்.

**ஹழ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.**

لَمْ يَكُنْ بِالْمُطْهَمِ وَلَابِالْمُكَلْثَمِ وَكَانَ فِيْ
وَجْهِهِ تَدْوِيْرٌ اَبْيَضُ مُشْرَبٌ

பெருமானார் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் உடல் பருத்தவர்களாகவும் வட்டமான முகம் கொண்டவர்களாகவும் இல்லை. எனினும் அன்னாரின் முகம் வட்டமாகவோ, நெடியதாகவோ இல்லாமல் நடுத்தரமானதாக இருந்தது. அன்னாரின் மேனி சிவப்பு கலந்த வெண்ணிறமாகஇருந்தது.

(நூல் : ஷமாயில் திர்மிதி)

ஹம்தான் என்ற கூட்டத்தைச்சேர்ந்த ஒரு பெண்மணியிடம் நபியவர்களின் அங்க அடையாளங்கள் பற்றிக் கேட்கப்பட்ட போது “பௌர்ணமி இரவின் சந்திரனைப் போல அவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் அவர்களைப் போல அழகான ஒருவரை நான் கண்டதே இல்லை” என்றுகூறினார்கள். (நூல் : அல் இன்சானுல் காமில்)

**ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுவதாவது :**

كَانَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَفْلَجَ الثَّنِيَّتَيْنِ
اِذَاتَكَلَّمَ رُأيَ كَالنُّوْرِ يَخْرُجُ مِنْ بَيْنِ ثَنَايَاهُ

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் முன் பற்கள் சற்று இடைவெளி விட்டதாக அமைந்திருந்தன. அன்னார் பேசும் போது அந்தப் பற்களிலிருந்து ஒளி வீசிக் கொண்டிருப்பது போல் தெரியும். (நூல் : ஷமாயில் திர்மிதி)

எனவே தான் அன்னாரைப் பார்த்த பெண்கள் அவர்களின் அழகில் மயங்கி பழங்களை வெட்டுவதற்கு பதிலாக...

وَقَطَّعْنَ اَيْدِيَهُنَّ وَّقُلْنَ حٰشَ لِلّٰهِ مَاهٰذَابَشَرًا
اِنْ هٰذَا اِلَّامَلَكٌ كَرِيْمٌ

தங்களின் கை (விரல்) களை அவர்கள் வெட்டிக் கொண்டனர். அல்லாஹ் தூய்மையானவன். இவர் (சாதாரண) மனிதரே அல்ல. சங்கையான மலக்காகத்தான் இருப்பார் என்று கூறினர். (அல்குர்ஆன் – 12:31)

அரபுக் கவிஞரொருவர் கூறுகிறார்.

وَصَحْبُ زُلَيْخَا لَوْ رَأَيْنَ جَبِيْنَهُ
لَاثَرْنَ تَقْطِيْعَ الْقُلُوْبِ عَلَى الْأَيْدِيْ

ஜுலைஹாவின் தோழிகள் பெருமானாரின் அழகிய வதனத்தை கண்டிருந்தால் தங்களின் கைகளை அல்ல. உள்ளங்களையே வெட்டிக் கொண்டிருப்பார்கள்.

பெருமானாரின் பேரழகை வர்ணிக்கப்புகுந்த ஸஹாபாக்களெல்லாம் சூரியனைப் போல, சந்திரனைப் போல என்று ஒப்பிட்டுக் கூறினாலும் அன்னாரின் அழகு இப்படித்தான் இருந்தது என உலகின் எப்பொருளைக் கொண்டும் அதற்கு உவமை காட்ட முடியாது என்பதே உண்மை.

எனவே தான் அண்ணலாரின் அவைக் கவிஞர் ஹழ்ரத் ஹஸ்ஸான் (ரலி) பாடினார்கள்.

وَأَحْسَنُ مِنْكَ لَمْ تَرَ قَطُّ عَيْنِي
وَاَجْمَلُ مِنْكَ لَمْ تَلِدِالنِّسَاءُ

“நபியே! உங்களை விட அழகு வாய்ந்தவரை என் கண்கள் கண்டதே இல்லை. உங்களை விடவனப்புமிக்க ஒருவரை பெண்ணினம் பெற்றெடுத்ததே இல்லை.”

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## அந்த வேத ஜோதியின் ஒளிக்கதிர்கள்

اتأمرون النّاس بالبرّ وتنسون انفسكم

உங்களை நீங்கள் மறந்து மனிதருக்கு நல்லது ஏவுகிறீர்களா?

وعسى ان تكرهوا شيئا وهو خيرلكم

நீங்கள் ஒன்றை பொருத்தக் கெடப் போதும்; அது உங்களுக்கு நல்லதாகும்.

كم من فئة قليلة غلبت فئة كثيرة باذن اللّه

واللّه مع الصّابرين

எத்தனையோ கொஞ்சம்பேர்கள் அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு அதிகம் பேரை வென்றனர்; அல்லாஹ் பொறுதியுடையோருடன்.

لن تنالوا البرّ حتى تنفقوا ممّاتحبون

நீங்கள் உவந்ததை நீங்கள் செலவு செய்கிறவரை நிச்சயமாக நீங்கள் நன்மையை அடைய மாட்டீர்கள்.

انّ اللّه لايغيّر مابقوم حتي يغيروا مابانفسهم

ஒரு சமூகம் தங்களிலுள்ளதை அவர்களாகவே மாற்றிக் கொள்ளாதவரை அவர்களிலுள்ளதை அல்லாஹ் மாற்ற மாட்டான்.

ولايحيق المكرالسّيئ الاّباهله

கெட்ட தந்திரம் அதை உடையவனையே தவிர சூழாது.

كل حزب بمالديهم فرحون

ஒவ்வொரு கூட்டமும் அவற்றினிடமுள்ளதைக் கொண்டு திருப்தியடைகிறது.

## அல் ஹதீஸ்

ஹதீஸென்பது நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதும் அவர்கள் செயலை பிறர் கூறியதும், அவர்கள் பற்றிய ஸஹாபாக்களின் செய்தியுமாகும். (பெருமானார் சந்ததிகளில் ஒருவர் ஒன்றைச் செய்து அல்லது சொல்லி அதை அவர்கள் சரிகண்டதும் இதைச் சேரும்) இது மார்க்கம், கல்வி, தேர்ச்சி இவை சம்பந்தப்பட்டதில் அல்லாஹ்வின் வேதத்திற்கு இரண்டாம் தகுதியில் உள்ளது. குர்ஆனை வியாக்கினம் செய்கிறதிலும் அதைத் தெளிவுபடுத்தி விளக்குவதிலும் இது உதவுகிறது.

ஹதீஸுகள் அறிவு, போதனை, வேத விதிகள் முதலியன அதில் அடங்கியுள்ளதுடன் அன்றைய மக்களைப் பூமியில் நடமாடும் அமரர்களாயும் மாற்றியது. இலக்கிய இலட்சணங்களும் வாசால நடையும் அதை அபார அழகுள்ளதாக்கியது.

### அவற்றிற் சில....

اصحابي كالنّجوم بايّهم اقتديتم اهتديتم

என் தோழர்கள் நட்சத்திரம் போன்றவர்கள். அவர்களில் எவரைத் தொடர்ந்தாலும் நீங்கள் நேர்வழி பெற்றீர்கள்.

لو توكّلتم على اللّه لرزقكم كمايرزق
الطّير تغزواخماصا وتعود بطانا

*நீங்கள் உங்களை அல்லாஹ் மீது சாட்டினீர்க ளானால் பறவைக்கு ஆகாரம் கொடுக்கிறது போன்று உங்களுக்கும் கொடுப்பான். பறவையானது காலையில் வயிறு ஒட்டியதாய் சென்று மாலையில் வயிறு நிரம்பியதாய்த் திரும்புகிறது.*

المرأة كالضلع ان رمت قوامها كسرتها

*பெண்ணானவள் விலா எலும்பைப் போலாகும் அதை நேராக்க நீ நாடினாயானால் அதை முறித்தாய்.*

الناس كلهم سواسية كاسنان المشط

*மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்களைப் போல் சமமானவர்கள்.*

جَنّة الرَّجل داره

*மனிதனின் சுவனம் அவன் வீடு.*

# நற்குணமே நாயகமே!

♦ (நபிகள் நாயகம்) ஸல்லள்ளாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கடுமையான வெட்கமுடையவர்கள். இன்னும் அடக்கமுடையவர்கள்.

♦ அவர்களுடைய செருப்புக்கு அண்டை போட்டுக் கொள்வார்கள். (காலணியை செப்பனிட்டுக் கொள்வார்கள்)

♦ அவர்களுடைய உடைக்கு ஒட்டுப் போட்டுக் கொள்வார்கள்.

♦ அவர்களுடைய ஆட்டிலிருந்து பாற்கறப்பார்கள்.

♦ தயாளமான போக்கிலே அவர்களுடைய குடும்ப வேலையிலே ஈடுபடுவார்கள்.

♦ ஏழை எளியோரை உகப்பார்கள். அவர்களுடனே அமர்ந்திருப்பார்கள். அவர்களில் நோயாளிகளைச் சந்திக்கச் செல்வார்கள்.

♦ அவர்களில் இறந்தவர்களை (அடக்க எடுத்துச் செல்லும்போது) பின் தொடர்வார்கள்.

♦ ஏழ்மை ஒருவரைத் தாழ்மைப்படுத்தி அவரை மனமொடியச் செய்த அத்தகைய எளியவரை இழிவுபடுத்த மாட்டார்கள்.

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் பர்ஸன்ஜிய்ய் மவ்லிது மொழி பெயர்ப்பு)

# வக்ஃபு சொத்துகள்....எச்சரிக்கை...

வக்ஃப் திருத்த மசோதா 2024 நன்மைகள் மற்றும் ஆபத்துகள் என்ற தலைப்பில், மஹாராஷ்டிர மாநில வக்ஃப் வாரியத்தின் ஓய்வுபெற்ற தலைமை நிர்வாக அதிகாரி ஷேக் அப்துல் ரவுஃப் ஊடகவியலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கிய ஒரு பவர் பாயிண்ட் சிம்போசியத்தின் போது... புதிய வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவின் மறைக்கப்பட்ட ஆபத்துகள் ஐந்து முக்கியமான உட்பிரிவுகளில் மறைக்கப்பட்டுள்ளதாக அப்துல் ரவூஃப் கூறினார்.

அதில், புதிய சட்டத்திருத்தத்தில் CWC (Central Waqf Council எனும் மத்திய வஃக்ப் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அளவு தற்போதுள்ள 14 ல் இருந்து 21 உறுப்பினர்களாகவும், மேலும் ஒரு தலைவர் சேர்த்து ஆக மொத்தம் 22 ஆக அதிகரிப்பதை சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், புதிய சட்டத்திருத்தப்படி (SWB) யில் 10 முஸ்லிம்கள் மட்டுமே இருப்பார்கள் என்றும் அந்த 10 முஸ்லிம்களில்தான் இரண்டு முஸ்லிம் பெண்களும் இருக்க வேண்டும் என்றும், மீதமுள்ளவர்கள் 12 பேர் அரசு நியமனம் என்பதால் அவர்கள் முஸ்லிம்களாகவோ அல்லது முஸ்லிம் அல்லாதவர்கள் குறைந்தபட்சம் 2 பேர் முதல் அதிகபட்சம் 12 ஆக இருக்கலாம எனவும் இதனால் சென்ட்ரல் வக்ஃப் கவுன்சிலில் மொத்தம் உள்ள 22 பேரில் 12 பேர் முஸ்லிம் அல்லாதவர்கள் மெஜாரிட்டி ஆக இருக்க முடியும் என்றார்.

அடுத்து 11 பேர் கொண்ட ஸ்டேட் வக்ஃப் போர்ட் (SWB) பற்றி பார்க்கலாம்.

மாநில வக்ஃப் வாரியங்கள் இப்போது புதிய சட்டத்திருத்தப்படி, முஸ்லிம் அல்லாத ஒருவரை அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) வைத்திருக்க முடியும். அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படும் வாரியத்தின் தலைவர், 2 எம்பி மற்றும் 2 எம் எல்ஏ இனிமேல் முஸ்லிம்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பொதுப்பிரிவிலிருந்து இருக்கலாம் என்பதால் ஒவ்வொரு வாரியக் குழுவிலும் உள்ள முஸ்லிம் அல்லாதவர்கள் எண்ணிக்கை 6 ஆகிவிடும். முஸ்லிம்களின் எண்ணிக்கையோ முத்தவல்லி, மத அறிஞர் மற்றும் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் மூவர் என்று 5 ஆக குறைந்து விடுகிறது.

இப்படியாக முஸ்லிம்களின் மத விவகாரங்களை தலைமை தாங்கி நிர்வாகம் செய்வோரில் பெரும்பான்மை முஸ்லிம் அல்லாதவர்களைக் கொண்டு வாரியம் நிரப்பப்பட முடியும் என்றார்.

அவ்ளோதான் முடிஞ்சதா வக்ஃப் கதை?

link: https://timesofindia.indiatimes.com/city/nagpur/new-waqf-act-to-reduce-muslim-members-on-central-council/articleshow/112435180.cms

முதல் நாள் அன்றே சொன்னேன். இது முஸ்லிம்களின் சொத்துகளைத் திருடும் சட்டம் என்று.

முஸ்லிம் அல்லாதவர்கள் நியமனம் என்கிற இடங்களில் நிச்சயமாக பாஜக ஆளும் ஒன்றிய மாநில அரசுகள் ஒருபோதும் கிறிஸ்தவர்களையோ, சீக்கியர்களையோ, ஜைனர்களையோ, பௌத்தர்களையோ, பார்சிகளையோ, நாத்திகர்களையோ, இந்துக்களையோ நியமிக்காது. பாஜகவின் சங்கிகளை மட்டும் தான் அங்கே நியமிக்கும். இதை 100 சதமானம் உறுதியாக கூறுகிறேன். இதன்மூலம் வக்ஃப் போர்டுகள் இனி சங்கி போர்டாக மாறிவிடும்.

அதன் பிறகு இந்த 500 ஆண்டுகால முஸ்லிம்களின் பள்ளிவாசல் வக்ஃப் சொத்து இல்லை. வக்ஃப் சொத்து என்று கூற எந்த ஆதாரமும் எங்களிடம் இல்லை என்று வக்ஃப் வாரியம் ஸாரி... ஸாரி... சங்கி வாரியம் கலெக்டரிடம் கூறிவிட்டால் அடுத்த நொடியே நூறு புல்டோசர்கள் அங்கே வந்து சட்டப்படியான அரசு நடவடிக்கை மூலம் அது தரை மட்டமாக இடிக்கப்பட்டு விடும்.

ரத்த யாத்திரை, கலவரம், கரசேவை, ஆட்சிக்கலைப்பு, இந்திய தொல்லியல் துறையின் அகழ்வாராய்ச்சி, ஊடக கருத்துருவாக்கக் கட்டமைப்பு, மற்றும் திணிப்பு, ஹை கோர்ட்டு கட்டப் பஞ்சாயத்து தீர்ப்பு, சுப்ரீம் கோர்ட்டு நில (பண்ட)மாற்று தீர்ப்பு, ஜட்ஜ்களுக்கு நியமன எம்பி பதவி, கவர்னர் பதவி, வெளிநாட்டு தூதர் பதவி இதெல்லாம் இனிமேல் தேவையே இல்லை நண்பர்களே.

பாபர் மஸ்ஜித் என்கிற 460 ஆண்டுகால வக்ஃப் சொத்தைத் திருட சங்கிகள் 70 வருடம் அப்படியெல்லாம் கஷ்டப்பட்டு சட்டவிரோதமாக போராடியது போல இனி போராடத் தேவை இல்லை. வெறும் 7 நிமிஷம் போதும். இனி அவர்கள் விரும்பும் முஸ்லிம்களின் நிலமெல்லாம் வேண்டிய மஸ்ஜித் கட்டிடங்கள் எல்லாம் இனி அவர்களுக்கே சொந்தமாகி விடும்.

---

# வாசக நேசர்களுக்கு

# முஃமின்களின் மூன்றாவது ஈதுப்பெருநாளான மீலாதுப் பெருநாள் நல் வாழ்த்துகள்!

# மனிதம் வெல்லும் வெள்ளம் அதனைச் சொல்லும்!

எங்கள் உயிரைக் காப்பாற்றிய பள்ளிவாசல் மினாரா ஒலிபெருக்கி.

நேற்று கேரளாவில் வைரலாக பகிரப்பட்ட ஒரு சகோதரியின் முகநூல் குறிப்பு.

வெளியே ஏதோ பயங்கர சப்தம் கேட்டு தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்தேன்.கவனித்துக் கேட்டபோது பக்கத்திலுள்ள பள்ளி வாசலிலிருந்து உரத்த குரலில் தக்பீர் சொல்வதைக் கேட்டேன். பலர் சேர்த்து தக்பீர் சொல்வதைக் கேட்டேன். பலர் சேர்ந்து தக்பீர் சொல்கின்றனர். விடியற்காலை பாங்கு சொல்வதற்கான நேரமாகவில்லை.

நிலச் சரிவு ஏற்பட்டுள்ளது.

அனைவரும் பாதுகாப்பான இடததிற்குக்கு செல்லுங்கள் என்றும் தக்பீருக்கிடையே அவர்கள் கூறுகின்றனர். இதைக் கேட்டதும் தொட்டிலில் உறங்கிக் கிடக்கும் குழந்தையை வாரி எடுத்து, மற்றவர்களையும் எழுப்பி வீட்டிலிருந்து வெளியே வந்தேன்.

அதற்குள் வீட்டு முற்றத்தில் தண்ணீர் நிரம்பியிருந்தது. அப்போதும் பள்ளி வாசலிலிருந்து தக்பீர் தொனி நிறுத்தப்படிருக்கவில்லை.

வெளியே வந்த நான் சுற்றிலும் பார்த்தேன். கும்மிருட்டு. இந்தக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு இந்த நடுச்சாமத்தில் நான் எங்கு செல்வேன் இறைவா...

மீண்டும் பள்ளியிலிருந்து அறிவிப்பு

யாரும் வெளியே நிற்க வேண்டாம், பள்ளி வாசலுக்கு வாருங்கள். ஆண்கள் மட்டும் செல்லும் அந்தப் பள்ளிவாசலுக்கு இந்துப் பெண்ணான நான் போக முடியுமா? பயத்தால் தொண்டை வரண்டு செய்வதறியாமல் திகைத்து நிற்கும்போது பள்ளி வாசலிலிருந்து சிலர் டார்ச்சு லைட்டுடன் எங்களை நோக்கி வந்தனர். சகோதரி இந்தப் பிள்ளைகளுடன் இங்கே நிற்காதீர்கள். பள்ளி வாசலுக்கு வாருங்கள் என்று அழைத்தனர் அவர்கள். அப்போதுதான் மகிழ்ச்சி வரும்போது கண்ணீர் வரும் என்பதை நான் அனுபவப்பூர்வமாக உணர்ந்தேன்.

பள்ளிக்குச் சென்றபோது எல்லா ஜாதி, மதத்தினரும் அங்கேயிருப்பதைக் கண்டேன். காலை புலர்ந்தபோது பள்ளியின் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது எங்கள் வீட்டின் கூரையை மட்டுமே காணமுடிந்தது.

பள்ளியின் மின் விசிறி ஊக்கில் பழைய சாரியால் கட்டிய தொட்டிலில் மகளை தூங்கச் செய்து கொண்டிருந்தபோது ஒரு பழைய சம்பவம் நினைவு வந்தது. ஒரு நாள் மைதீனுடன் எனது கணவரின் தம்பி ஹரி வீட்டிற்கு வந்தான். ஒரு பேப்பரை நீட்டி என்னிடம் அண்ணி இதில் கையொப்பமிட்டு தாருங்கள். எதற்காக கையெழுத்து என்று கேட்டுக் கொண்டே அந்தப் பேப்பரை நான் வாங்கியபோது, என்னுடைய மகன் அதை என்னிடமிருந்து வாங்கிப் படித்துப் பார்த்து விட்டு அம்மா இதில் கையெழுத்திட வேண்டாம். சித்தப்பாவுக்கும், மைதீன் காக்காவுக்கும் பைத்தியம் என்றான்.

மகன் இப்படிச் சொன்னபோது மைதீன் சொன்னான். உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் ஏற்படாது. அந்தப் பேப்பரை நான் படித்துப் பார்த்தேன். மாவட்ட ஆட்சியருக்கு எழுதப்பட்ட ஒரு புகார் மனு அது. ஐயா எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு கட்டடம் கட்டுகின்றனர். அது ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் என்று அறிந்தோம். கட்டடம் கட்டி முடிந்தால் அங்கு பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கி எங்கள் பிள்ளைகள் படிப்பதற்குச் சிரமத்தை உருவாக்கும். எனவே அந்தக் கட்டடம் கட்டுவதைத் தடுத்த நிறுத்த வேண்டும். அந்தப் பேப்பரைக் கிழித்து எறிந்து விட்டு குடிப்பதற்கு ஏதாவது வேண்டுமா? என்று அவர்களிடம் கேட்டேன். இதற்கான விளைவை நீங்கள் அனுபவிப்பீர்கள் என்று சொல்லி விட்டு அவர்கள் திரும்பிச் சென்றனர்.

அவர்கள் சொன்னது சரிதான். நான் அனுபவிக்கின்றேன். இந்தப் பள்ளியில் எந்த ஒரு நிகழ்ச்சி நடந்தாலும் அதில் ஒரு பங்கு எனது மக்களின் கைகளுக்குக் கிடைக்காமலிப்பதில்லை. இன்று அந்தப் பள்ளி மினாராவின் ஒலிபெருக்கி எங்கள் உயிர்களை காப்பாற்றியது. அன்றைய அந்த சம்பவத்தை நான் எண்ணிப் பார்க்கின்றேன். ஹரியை அனைவரும் அறிவர். அவன் இப்போது பழைய ஹரி அல்ல. ஆனால் இந்த மைதீன்...?

இந்த உலகத்தின் மிகப் பெரிய பிரச்சனை தவறான எண்ணம். யாரோ ஒருவர் சொல்வதை நம்பி விடக்கூடாது. சத்தியத்தைத் தேடி புரிந்துக் கொள்ள வேண்டும். கவளப்பாறை நிலச் சரிவின்போது இறந்து போனவர்களின் போஸ்ட்மார்ட்டம் பள்ளி வாசலில் நடந்தது. சமீபத்தில் வயநாடு குன்னம்பற்றயில் இறந்த சந்தோஷ் என்பவரின் உடல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட இடம் பள்ளி வாசல்.

ஒரு முஸ்லிம் அல்லாத ஏழைப் பெண்ணின் திருமணம் சேரமான் பள்ளியில் நடைபெற்றது

பிரளய காலத்தில் மக்கள் பள்ளிகளிலும், கோவில்களிலும், சர்சுகளிலும், மதரஸாக்களிலும், பள்ளிக்கூடங்களிலும் தூங்கினர். பள்ளிகளுக்கும், கோவில்களுக்கும் இதுபோன்ற ஏராளமான நன்மைகளின் கதைகள் சொல்வதற்கு உண்டு. எனவே முதலில் மனிதன் ஆக வேண்டும். அதன்பின் போதும் ஜாதியும், மதமும் ஒரு ஆபத்தில் சிக்கி நடுரோட்டில் வீழ்ந்து கிடக்கும் போது வந்து உதவுபவர் யாரென்றோ முற்கூட்டி அறிய துணியாத காலம்வரை எவ்வித வகுப்பு வாதத்துக்கும் இடமில்லை... படித்ததில் பிடித்தது

## உம்மில் சரணடைந்து உண்மை நிலை அறிந்தோம் !

அன்பே ஆருயிரே
கண்ணே கண்மணியே
குருவே சற்குருவே
உம் வரவே ஓர் வரமே
உங்கள் கரம் பிடித்து அறியாமை தகர்த்து
உம்மில் சரணடைந்து உண்மை நிலை அறிந்தோம் (அன்பே)

காணும் காட்சிகள் யாவும் ஏகமே
நெஞ்சம் எங்கிலும் இறையின் தாகமே
தேடும் கண்களில் திருமுகம் தோன்றுமே
உருகும் போதிலே இறையுருவாகுமே
ஏக ஞானமே குருவழி காட்டுமே
நம்நபி நாதரின் மறுவுருவாகுமே
உங்கள் கரம் பிடித்து அறியாமை தகர்த்து
உம்மில் சரணடைந்து உண்மை நிலை அறிந்தோம் (அன்பே)

எம் குரு நாதரின் நெருக்கம் கூடுதே
மறைவின் பின்னரோ பல மடங்கானதே
உங்கள் சன்னிதி நெஞ்சம் தேடுதே
அங்கே தங்கிட நாளும் ஏங்குதே
குருவே பூரணமே குருவே காரணமே
குருவே நானிலமே குருவே யாவிலுமே
உங்கள் கரம் பிடித்து அறியாமை தகர்த்து
உம்மில் சரணடைந்து உண்மை நிலை அறிந்தோம் (அன்பே)

*ஹெச். ரெஜியாம்மாள் மெட்டு: மேரே ஹாத்துமே -இசை: ஃபனா*

# காது – கேட்காதா?

கலீபா . ஆலிம் புலவர். எஸ்.ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ.

ஹாதமுல் அஸம்மு ஒரு பெரியார்
காது கேட்கா தெனச் சொல்வர்
காது உண்மையில் கேட்காதா?
கேட்கும், எனினும் அதற்குப் பின்
கதையொன்று உண்டு கேட்டிடுவீர்!
மாது ஒருத்தி அவர்களிடம்
மஸ்அலா கேட்க வந்தமர்ந்தாள்
மாதவள் கேட்டு வரும்போதே

காற்று அவளே அறியாமல்
கசிந்தது! அவளோ நாணமுற்று
தோற்றம் கூனிக் குறுகி நின்றாள்
துன்பம் ஈதென்ன? திகைத்திருந்தாள்
மாற்றம் எதையும் அறியாத
மனிதர் போல ஹாத்தம் அவர்
போற்றும் போதனை தொடர்ந்திருந்தார்
பொறுப்பாய் மார்க்கம் விளக்கி நின்றார்!

அந்த நேரம் பார்த்தொருவர்
ஆங்கு வந்தொரு வினாத் தொடுத்தார்
இந்தக் காதுகள் கேட்பதில்லை
எனவே உரக்கச் சொல்க! என
வந்தவரிடத்தில் ஹாத்தம் சொன்னார்
மாதவள் நிம்மதி மூச்சு விட்டாள்!
எந்த ஓசையும் கேட்டிருக்க
இவருக்கு வாய்ப்பில்லை! என நினைத்தாள்.

அன்றிலிருந்து ஹாத்த மவர்
அறவே காது கேட்கவில்லை
என்பது போல நடித்து வந்தார்!
எதனாலென்றால் எவரேனும்
நன்கு செவிகள் கேட்பவர்தான்
நமது ஹாத்தம் என அந்தப்
பெண்ணிடம் தெரியச் செய்துவிட்டால்
பேதை ஏமாந்தே போவாள்!

மாதவள் உணர்வை மதித்துத் தம்
வாழ்நாள் முழுதும் செவிடர்போல்
மாதவர் வாழ்ந்தார் ஹாத்தமவர்!
மனஉயர்வென்ன மாண்பு என்ன!
தூதர் நபிகள் நற்குணத்தைத்
தொடர்ந்த வலிமார் புகழ் என்றும்
நாதமாக ஒலிக்கட்டும்
நாட்டில் நற்குணம் பரவட்டும்!

---

# நற்குணமே நாயகமே!

♦ மன்னிப்பை ஒப்புக் கொள்வார்கள்.

♦ பொருத்தக்கேடான ஒருவனுடன் கருத்தொருமிக்க மாட்டார்கள். (நெருங்கிப் பழக மாட்டார்கள். ஒப்புக் கொள்ள மாட்டார்கள். நேர்முகப்பட மாட்டார்கள்.)

♦ அமங்கலிகளுடனும் அடிமைத்தனத்தையுடை யவர்களுடனும் நடந்து செல்வார்கள்.

♦ அரசர்களுக்கு அஞ்சமாட்டார்கள். (சங்கை செய்ய மாட்டார்கள்) பாராளுமன்றத்தில் தமிழில் பேசியபோது முட்டாளே உட்கார் என்றார்கள், நான் உட்காராமல் நின்று கொண்டிருந்தேன்

♦ அள்ளாஹு தஆலாவுக்காகவே கோபிப்பார்கள். அவனுடைய பொருத்தத்தையே பொருந்திக் கொள்வார்கள்.

♦ ஆத்மீக வானவர்களுக்காக என் முதுகுப்புறத்தை (பின்புறத்தை) விட்டு விடுங்கள் எனக்கூறி அவர்களுடைய தோழர்களுக்குப் பின்னால் நடப்பார்கள்.

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் பர்ஸன்ஜிய்ய் மவ்லிது மொழி பெயர்ப்பு)

## முதலாம் ஆண்டு
## பிறந்த நாள் வாழ்த்து



**வாழ்க்கை தந்த சங்கை குரு**
**வள்ளல் கலீல் அவ்ன் உயிர்த் தந்தை**
**ஆக்கம் தருவீர் ! அருளோடு**
**அனைத்தும் தருவீர் ! யாஸீன் அலி**
**ஊக்கப் படையில் ஹாதிக் ஒரு**
**முன்னணி வீரர் ஆகிடட்டும்!**
**காக்கும் இறைவா! நலமெல்லாம்**
**கனிவாய்த் தருவாய் நபிபொருட்டால்!**

## வாழ்த்தும் நெஞ்சங்கள்

பிறந்த தேதி :
14-09-2023

தந்தை : B. முஹம்மது அஸாருதீன்
தாய் : M. ரிப்தா
தாதா : M. பக்ருதீன் அலி அஹமத்
தாதி : B. ஷகிலா பேகம்
நன்னா : கலீபா. ஆலிம் புலவர்
நன்னி : M. ஹஸன் பாத்திமா
பெரியத்தா : B. முஹம்மது ஆஸிம்
பெரியம்மா : M.ரேஷ்மா

**மற்றும் பெரியம்மாக்கள் H. பாஹிரா H. ஜாஹிரா H. ராபிதா & பெரியத்தாக்கள்.**
**மற்றும் குட்டீஸ் ஹஸிபா,ஸரீஹா, ஏஃபீரா, மாஹிர், ஃபாரிஹ், சிக்கந்தர். வெஸ்மா,**

# அவனி போற்றும் அண்ணலார்

முஹம்மது காலித் யாஸீனிய்,

பேராசிரியர் அறபுத்துறை, ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

நாளெல்லாம் மாதமெல்லாம் வருடமெல்லாம்
நந்நபியை நாமெல்லாம் புகழல் வேண்டும்
ஆளன்சொல் லும்ஸலவாத் ஓதல் வேண்டும்
அவர்கடிரு நாமங்கள் பாடல் வேண்டும்
சூளலுற்ற கூட்டத்தின் சொற்க ளெல்லாம்
தூயதெனக் கேளாதே யிருத்தல் வேண்டும்
ஆளுநபி சொற்களெல்லாம் மதித்தல் வேண்டும்
அவ்வண்ணம் நடந்து விட்டால் முஸ்லிமாமே.

**– ஜமாலிய்யாஅஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்கள்.**

இவ்வுலகில் இதுவரை வாழ்ந்தவர்களில் இனி வாழப் போகின்றவர்களில் யாருக்கும் இல்லாத தனிப்பெரும் சிறப்புகள் நபியவர்கட்கு மிக அதிகமாக உண்டு. இவ்வுலகப் பெருந்தலைவர்களல் நபிகளாரைத் தவிர வேறு எவரும் எல்லாத் துறைகளிலும் முன் மாதிரியாகத் திகழவில்லை.

ஏழையாக, அநாதையாக, வணிகராக, பொதுப் பணியாளராக, பெண்குலத்தைப் பேணிக்காத்தவராக, தளபதியாக, தோழராக, தொண்டராக, துணைவராக, தந்தையாக, இல்லறத் தலைவராக, மக்களைக் காக்கும் நாயகராக, நீதிபதியாக, உழைப்பைப் போற்றும் உத்தமராக, நன்னெறி பிறழா ஆட்சியாளராக இவ்வாறு எல்லாத்துறைகளிலும் நபிகளார் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் சுட்டிக்காட்டாத துறை எதுவுமே இல்லை.

எல்லாத் துறைகளிலும் முன்னுதாரணமாக விளங்கியதோடு, மிகுந்த இரக்க சிந்தனையாளராக, பண்பாளராக, தோழர்கள் மீது அன்பும் பெரும் அக்கறையும் கொண்டவராக இருந்ததால், அன்னாரின் மீது அவர்களின் தோழர்கள் அளவிலா அன்பும், மரியாதையும் செலுத்தினார்கள்.நபிகளாரை அவர்களின் தோழர்கள்

நேசித்த அளவிற்கு, இவ்வுலகில் எத்தலைவரும் தன் தொண்டர்களால் நேசிக்கப்படவோ, மரியாதை செலுத்தப் படவோ இல்லை.

ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஹுதைபிய்யா உட ன்படிக்கையின் போது மக்காவாசிகளின் சார்பில் தூதுவராக வந்த உர்வத்து பின் மஸ்ஊத் தகஃபி அவர்கள், மக்கா திரும்பியதும் ஸஹாபாக்களின் நடவடிக்கைகளில் தான் கண்டவைகளை குறைஷிகளிடம் வியப்புற்றுக் கூறியது சிந்தையில் நிறுத்தி வைக்க வேண்டிய விஷயமாகும்.

உர்வத்து பின் மஸ்ஊத் தகஃபி கூறுகிறார் : குறைஷியர்களே! நான் பெரும் அரசர்களின் அவைகளுக்கெல்லாம் சென்றிருக்கிறேன். ரோமபுரி, பாரசீகம், அபீஸினியா போன்ற நாடுகளின் அரச தர்பார்களிலெல்லாம் சென்று பார்த்துள்ளேன். அம்மன்னர்களுக்கு மக்கள் செய்யும் மரியாதையையும் கண்டிருக்கிறேன்.

ஆனால், அல்லாஹ்வின் மீது சத்தியமாக, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தோழர்கள் அன்னாருக்குச் செலுத்தும் மரியாதையைப் போன்று எந்த அரசனுக்கும், அவனுடைய பிரஜைகள் மரியாதை செய்ததை நான் கண்டதில்லை. அவர் எச்சில் துப்பினால் அவர்களில் யாராவது ஒருவருடைய கையில் தான் விழுகிறது. அவர் அதனைத் தன் உடல் முகம் அனைத்திலும் தடவிக் கொள்கிறார்.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளியாகி விட்டாலே, அதனைச் செயல்படுத்துவதற்கு அனைவரும் போட்டியிடுகின்றனர். அவர் உளூச் செய்து கீழே விழும் தண்ணீரைப் பிடிக்க தங்களுக்கிடையே சண்டையிட்டுக் கொண்டு பங்கிட்டுக் கொள்கின்றனர். அதனை பூமியில் விழ விடுவதில்லை. எவருக்கேனும் அந்தத் தண்ணீர் கிடைக்காவிட்டால் அவர் – தண்ணீர் ஈரம் இருக்கும் மற்றவருடைய கையில் தன் கையை வைத்துத் தேய்த்து, அதனைத் தன் முகத்தில் தடவிக் கொள்கிறார். அன்னாருக்கு முன் பேசும் பொழுது மிகவும் தாழ்ந்த குரலில் பேசுகின்றனர். எவரும் அவர் முன்னிலையில் சப்தமிட்டுப் பேசுவதில்லை. மரியாதையின் காரணமாக அன்னாருடைய முகத்தை அவர்கள் ஏறிட்டும் பார்ப்பதில்லை.அன்னாருடைய தலைமுடி ஏதேனும் விழுந்துவிட்டால் அதனை பரக்கத்திற்காக எடுத்து வைத்துக்கொண்டு அதற்கு மரியாதையும் கண்ணியமும் அளிக்கின்றனர். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அன்னாரின் கூட்டத்தினர் அன்பு வைத்திருப்பது போன்று எந்தக் கூட்டத்தினரும் தங்களுடைய எஜமானர் மீது அன்பு வைத்திருக்கமாட்டார்கள். *(தொடர்ச்சி 36 ஆம்பக்கம்.)*

# முஹம்மது முன்ஷித்

## முதலாம் ஆண்டு
## பிறந்த நாள் வாழ்த்து



எங்கள் வீட்டின் மகிழ்ச்சியே !
எங்கள் கண்கள் குளிர்ச்சியே !
எங்கள் குருவாம் கலீல் நாதர்
எங்களுக்களித்த பூச்சரமே !
கல்வி செல்வம் நல்லொழுக்கம்
கண்ணிய ஞானம் நபியன்பு
எல்லா வரமும் நீபெற்று
இரஸூல் பொருட்டால் நீ வாழ்க!

பிறந்த தேதி :
22-08-2023

## வாழ்த்தும் நெஞ்சங்கள்

தந்தை : முகமது நாஜிஹ்
தாய் : சுஹறா
அப்பா : கலீஃபா முஸ்தபா
அத்தம்மா : ஜெசிமா
மாமிமார்கள் : பாஹிரா, சாகிரா
மாமன்மார்கள் : முகமது சாதிக் – முகமது யாகூப்
மச்சான் மார்கள் : முஹம்மது ஷாஹிர், முஹம்மது சாகிர், முஹம்மது நாசிர்
மச்சி : நஜீஹா,
உம்மம்மா : தஸ்லீம் பேகம் ,
அப்பா : ஹுசைன் பாபு
தாய் மாமன் : சாஹில்
சின்னபாட்டி : மிஸ்பா பேகம்



யாகலீல்

ஸல்லல்லாஹு அலா முஹம்மது — பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் — ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# நிக்காஹ் என்னும் திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதுஹு.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளாலும், இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் துஆ பரக்கத்தாலும் எங்கள் செய்கு நாயகம் பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பேரர் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூது **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்** அவர்களின் நல்லாசி நிறை துஆ பரக்கத்தாலும்,**நிகழும் ஹிஜ்ரி 1446 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் பிறை 11 (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை** முற்பகல் 11.30 மணிக்குமேல் 12.30 மணிக்குள் முபாரக்கான வேளையில்,

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், மேலத்திருப்பூந்துருத்தி,
மர்ஹூம் **.A.ஹபீபுல்லாஹ்** மற்றும்
மர்ஹூம் பொடிப்பிள்ளை **P.A. அப்துல்லத்தீப்** ஆகியோரின்
பேரனும், ஜனாப். **H..முஹம்மது இஸ்மாயீல் – சபுரா பேகம்**
அவர்களின் தவப்புதல்வனுமாகிய

## M. ஷேக் அப்துல் ரஹ்மான் B.Sc.,(CS) D.Acu.,

**மணாளருக்கும்**



தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், மர்ஹூம்.ஊசி **A.பாவாஜி** மற்றும் மர்ஹூம்
வழுத்தூர் தோட்டத்தூர் **M.அப்துல் கரீம்** ஆகியோரின் பேத்தியும்,
மர்ஹூம். **A..சவுக்கத் அலி – சபீனா பானு** அவர்களின்
தவப்புதல்வியாகிய

## S. நபிலா சுஹாத் B.Com., (CA) (முஅல்லமா)

**மணாளிக்கும்**

இன்ஷா அல்லாஹ் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் மேற்படி நிக்காஹ், **மேலப்பூந்துருத்தி, மேலப்பள்ளிவாசலில்** நடைபெறும் நிக்காஹ் மஜ்லிஸிலும், அதனைத் தொடர்ந்து **மேலப்பூந்துருத்தி, மேல மதரஸா மன்பவுல் ஹிதாயா திருமண மஹாலில்** நடைபெறும் விருந்தித்து உபசரிப்பிலும் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மஜ்லிஸை சிறப்பித்து மணமக்கள் ஹக்கில் துஆச் செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அவ்வண்ணமே கோரும்:**

P.A.P. தவக்கல் பாட்சா,
மச்சான்: K.கான் முஹம்மது ரிபாயுதீன் B.Tech.,
மச்சான்: A.முஹம்மது அமீன் M.B.A.
No17. ரெட்டிப்பாளையம் ரஸ்தா,
வல்லம், தஞ்சாவூர் மாவட்டம்.
செல்:9790422399

ஓ

**குட்டீஸ்**

A.முஹ்சினா அப்சரா
M.சாபித் அல்சலாம்
M.சபீக் அல்சலாம்
H.ஹாஸ்னியா
K.ரஸீன் அஹமது
M.அஸ்ஃபா ஹாப்ரின்

ஓ

**தங்கள் அன்புள்ள...**

H. முஹம்மது இஸ்மாயில்,
M. சபுரா பேகம்,
மச்சான்: M.G.அப்துல் ஜமீல் (கேம்ப்– குவைத்)
மச்சான்: A.முஹம்மது ஹாரூன் ரஷீத் B.Sc., AME (கேம்ப்– சிங்கப்பூர்)
மச்சான்: M. ஹாஜி முஹம்மது D.CSE., (கேம்ப்– துபை)
No116. முஹைய்யதீன் நகர், மேலத்திருப்பூந்துருத்தி
செல்: 733947058, 9894662781

*(32 ஆம்பக்கத் தொடர்ச்சி)*

அண்ணலாருக்கு அப்புனிதர்கள் செய்த மரியாதைக்கும், அன்னாரின் மீது அவர்கள் கொண்ட ஈடு இணையற்ற அன்பிற்கும் பாசத்திற்கும் இது ஒரு சிறிய எடுத்துக்காட்டாகும். வரலாற்றில் இது போல் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளுண்டு.

எந்த தனி மனிரும் இவர்கள் அளவுக்கு இலட்சோபலட்ச மக்களால் கோடானுகோடி மக்களால் இதயப்பூர்வமாக உயிரினும மேலாக விரும்பப்பட்டார்கள் என்ற வரலாறு இதுவரை இல்லை. இனியும் இருக்காது என்பதில் இரு கருத்து இருக்கவே முடியாது.

ஏனெனில் இவ்வுலகத் தலைவர்களில் பலர் மரணத்திற்குப் பின் முற்றாக மறக்கப்பட்டுவிட்டனர். ஒரு சிலர் எப்போதாவது ஏதோ சிலரால் நினைவு கொள்ளப் படுகின்றனர். ஒரு சிலர் அதிகமானவர்களால் நினைவு கொள்ளப்பட்டாலும் அடிக்கடி நினைக்கப்படுதில்லை. ஆனால் நாயகம்ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் நம் கண்களை விட்டு மறைந்து 1400 ஆண்டுகளாகியும் அதிகமானவர் களால் நினைவு கொள்ளப்படுகிறார்கள். அடிக்கடி நினைவு கொள்ளப்படுகிறார்கள்.

தொழுகையின் அழைப்பில் அண்ணலார் ஒவ்வொரு நேரத் தொழுகைக்கான அழைப்பில் (பாங்கில்) அஷ்ஹது அன்னா முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்று இருமுறை சொல்லப்படுவது நாம் சாதாராணமாக அறிந்த விஷயமே... என்றாலும் உலகம் பூராவும் ஒலிக்கப்படுவதை ஆராயும் பொழுது நமக்கு வியப்பு மேலிடாமலிரு க்காது.

இவ்வுலகிலுள்ள பள்ளி வாயில்களின் எண்ணிக்கை ஆறாண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட கணக்கின்படி 47 லட்சமாகும். இவைகளில் ஒவ்வொரு நேர பாங்கிலும் இருமுறை கூறப்படும் நமது நபிகளாரின் திருநாமம் ஐவேளை பாங்கில் தினந்தோறும் பத்து முறை உச்சரிக்கப்படுகிறது. இவ்வாறே லட்சம் பள்ளிகளிலும் பத்து முறை அழைக்கப்படுகிறபொழுது அவை அனைத்திலும் சேர்த்து ஒவ்வொரு நாளும் 4 கோடியே 50 லட்சம் தடவை நபி அடிகளாரின் திருப்பெயர் கூறப்பட்டு வருவதை உணர முடியும்.

இவை யாவும் குறிப்பிட்ட சில நேரங்களில் மொத்தமாகக் கூறப்பட்டு முடிந்து போய்விடுவதில்ல. பூமி உருண்டை, தன் சுய முயற்சியோடு சூரியனையும், சுற்றி வருவதால் இடத்துக்கு இடம், நாட்டுக்கு நாடு, நேரங்களில் வித்தியாசம் ஏற்படுகிறது. இதனால் ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு நேரமும், உலகின் ஏதோ ஒரு மூலையில் ஏதேனும் ஒரு தொழுகைக்காக எப்பொழுதும் பாங்கு சொல்லப்பட்ட வண்ணமே

இருக்கிறது. அதில் அண்ணலாரின் பெயரும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று உச்சரிக்கப்படாத விநாடியே இல்லை. பாங்கைப் போன்றே தொழுகைக்கு முன் சொல்லப்பட்டும் இகாமத்திலும் இதே எண்ணிக்கையில் அண்ணலாரின் திருப்பெயர் கூறப்படுவது நமக்குத் தெரியாததல்ல, 45 லட்சம் பள்ளிகளில் சொல்லப்படும் ஒவ்வொரு நேர பாங்கிற்கும் சராசரி பத்து பேர்கள் பதில் சொல்வதாக வைத்துக் கொண்டாலும், தொழுகையிலும் நாள்தோறும் ஒதும் தரூதே ஷரீபில் அண்ணலாரின் பெயரை நான்கு தடவை கூறுகிறார். ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தளவு சராசரியாக 20 பேர் தொழுவதாக வைத்துக் கொண்டாலும் பாங்கை விட பன் மடங்கு தடவைகள் அண்ணார் நினைவு கொள்ளப்படுவதை அறிய முடியும். இவையன்றி ஜவேளைத் தொழுகைக்குப் பின் கேட்கப்படும் துஆக்கள். முஸ்லிம்களால் காலை மாலை ஓதப்படும் ஸலவாத்துகள். மார்க்க சொற்பொழிவுகள். அரபிக் கல்லூரிகளின் , ஹதீஸின் பாடசாலைகள் என்பன போன்றவைகளிலெல்லாம் அண்ணலார் நினைவு கொள்ளப்படுவதைப் பார்க்கும் பொழுது அண்ணலார் தான் இவ்வுலகில் அதிகமதிகம் நினைவு கொள்ளப்படுகிறார்கள் என்பதில் எள் முனையளவும் சந்தேகம் இருக்கவே முடியாது.

இவைகளில் எல்லாம் தாஹா நபியவர்கள் மட்டுமே தனித்து விளங்குகிறார்கள் என்பதை அறியும் பொழுது **நாளெல்லாம் மாதமெல்லாம் வருடமெல்லாம் நந்நபியை நாமெல்லாம் புகழல் வேண்டும்** என அருளிய சங்கைமிகு குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் வாப்பா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) **அவர்களின் வார்த்தைகள் எவ்வளவு உயிரோட்டமானது என்பதை உணர முடிகிறது**. பூமான் நபியின் புகழ் பாடுவோம்.

இத்துணை நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் (என்றும்) மங்காப் புகழ் பெற்று இவ்வுலக மக்களால் அதிகமதிகம் நினைவு கொள்ளப்பட்டு, புகழப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகளில் முக்கியமான அறிஞர்கள் மேதைகள் உயர்ந்தோர் உதித்த முத்துக்களை சிலவற்றை பார்ப்போம்

பெருமானாரின் முழு வாழ்க்கையும் **குர்ஆன்** ஆகவே இருந்தது.

– ஆயிஷா சித்தீகா (ரலி)

இறைவன், கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்புக்களையும், புகழ்களையும் ஈருலகிலும் மேலோங்க செய்துள்ளான்.

“நாம் உமக்காக உம்முடைய **புகழை மேலோங்கச் செய்தோம்**” (அல்குர்ஆன் 94 4)

நாயகமே நாம் உங்களை அகிலத்தாருக்கு **அருளாகவே** அனுப்பியுள்ளோம்.
- அல் குர்ஆன் (21107)

நபியே! நிச்சயமாக நாம் உங்களை (மனிதர்களுக்கு)ச் சாட்சியாளராகவும், நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் வைத்திருக்கிறோம். **ஒளிவீசும் (மணி) விளக்காவும் இருக்கின்றீர்கள்** ஆகவே (நபியே) விசுவாசிகளுக்கு அல்லாஹ்விடத்தில் நிச்சயமாகப் பெரும் அருள் இருப்பதாக நீங்கள் அவர்களுக்கு நன்மாராயங்கூறுங்கள்.

முஹம்மது நபியின் வெற்றிக்கு முதல் காரணம், அவர்கள் கொண்டிருந்த உறுதியும் ஊக்கமும். இத்தகைய உறுதி அந்தக் காலச் சூழ்நிலையில் ஏற்படுவது எளிதன்று. இரண்டாவது காரணம். இஸ்லாம் போதிக்கும் சமத்துவமும் சகோதரத்துவமுமாகும்.

திருக்குர்ஆனுக்கும் தூதர் முஹம்மது அவர்களுக்கும் என்விசுவாசத்தை வழங்குகிறேன். குர்ஆனின் கொள்கைக்கு இணங்க ஒரே விதமான ஆட்சியை உலகெங்கும் நிறுவக்கூடிய காலம் வெகுதூரத்தில் இல்லை. – நெப்போலியன்

இறுதி மூச்சுவரை ஏகத்துவத்தை, ஒருவனே தேவன் என்பதை பிரச்சாரம் செய்து, அசைக்கமுடியாத இறைநம்பிக்கையுடன் இருந்து, தாமே இறைவனின் தீர்க்கதரிசி என்ற உள்ளுணர்வுடன் உரிமை கொண்டாடிய முஹம்மது நபி அவர்களின் நபித்துவத்தை எவரேனும் மறுக்க முடியும்?

முஹம்மது நபியின் நற்பண்புகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றிய அவருடைய கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பிரிட்டன் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு விடும் என்று எதிர்பார்க்கிறேன். –பெர்னாட்சா–

செந்தழலைக் குளிராகவும், சினங்கொண்டு சீறிவரும் பகையைக் குணங்கொண்ட நட்பாகவும் மாற்றவல்ல மனவலிமை மிக்க மேலோர் நபிகள் நாயகம். – கலைஞர் கருணாநிதி

எந்த சகோதரத்துவ அடிப்படையில் புதிய உலகத்தை நிர்மாணிக்க வேண்டுமென்று இன்றைய நாகரிக உலகம் விரும்பி நிற்கிறதோ, அதே சகோதரத்துவத்தை அன்றைக்கே பாலைவனத்தில் ஒட்டகம் ஓட்டிக்கொண்டிருந்த மனிதரால் பிரசாரம் செய்யப்பட்டது. அந்த மனிதர், ஏக சகோதரத்துவத்துக்கு ஒரு சரியான விளக்கம் கூறினார். எந்த விதமான உயர்வும் தாழ்வும் வேற்றுமையும்

இல்லாத மக்களைக் கொண்ட ஒரு குடிஅரசு எப்படி இருக்கவேண்டும் என்பதையும் அவரே விளக்கினார். – கவியரசி சரோஜினி நாயுடு

ஆட்சி புரியும் அமைச்சர்கள் நபிபெருமான் வகுத்த சீர் திருத்தங்களை பின்பற்றி நடக்கவேண்டும். – காந்திஜி

உலகம் என்ற கர்ப்பப்பை இவர் போன்ற மனிதரைப் பெற்றதே இல்லை

– கவிமேரு. அல்லாமா இக்பால்–

பெரியோர்களின் வாழ்க்கையில் அறிய நிறைய இருக்கும். அவர்களுடைய நடைமுறைகள் அறிவுக்கும் அப்பாற்பட்டவையாய் இருக்கம். அவர்களை நாம் சீர்தூக்கிப் பார்க்கலாகாது. முஹம்மதுவின் பெருமையை ஏசுநாதரால்தான் அறிய முடியும். சிறு குழந்தைகளான உங்களாலும் என்னாலும் எப்படி அறிய முடியும்? முஸ்லிம் சமயத்தில் உள்ளீடாக நன்மை இல்லாது போனால் எப்படி அதனால் நீடித்து நிலைத்து இருக்க இயலும்? அந்த மார்க்கத்தில் மிகுந்த நன்மை இருக்கிறது. சமத்துவமும், சகோதரத்துவமும் முஹம்மது நபி வழங்கியவை. முஸ்லிம்களிடையே சகோதர உணர்வு ஓங்கி வளர அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள்.

மார்க்கம் நடை முறையில் வரும்போது அது மக்களுக்குப் பயன்படவேண்டும். அதற்கு சுற்றுச் சார்பும் சூழ்நிலையும் அமைய வேண்டும். சூழ்நிலையை மனிதன் உண்டாக்குகிறான். சுற்றுச்சார்புக்கு மாறாக நாம் நடந்தால் தனக்குத் தீமையை அளிக்கும் என்பதைத் தெளிவாக அறிந்தும், கெட்டிருக்கின்ற சுற்றுச்சார்புகளை அழித்து யார் நல்ல சுற்றுச் சார்புகளை ஏற்படுத்துகிறாரோ அவரை மகான் என்று சொல்லலாம். அத்தகைய மகான்களின் சிறந்தவர் நபிகள் நாயகம்.

– அறிஞர் அண்ணா

உலக சீர்திருத்தவாதிகளில் சிறந்து விளங்குபவர் முகம்மது நபி அவர்களே.

– ஷர்தேவ் பிரகஷ்

நீதி நெறி வகுத்தோருள்ளும், வெற்றி கணடோருள்ளும் எவரின் சரிதையும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரிதையைப போன்று விரிவான விஷயங்கள் அடங்கியதாகவும், முற்றிலும் உண்மையா னதாகவும் அமையவில்லை என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

– ஜான் டியூன் போர்டு

நபிகள் நாயகம் இவ்வுலகில் தோன்றியிருக்காவிட்டால் ஒரே இறை வணக்கம் என்ற நந்தா விளக்கே இவ்வுலகில் இல்லாதொழிந்திருக்கும்.

–ராஜாராம் மோகன்ராய்.

முஹம்மது நபி ஒருவர்தாம் உண்மையன தீர்க்க தரிசி. எப்படி எனின் இவ் உலகத்துக்கே பொதுவான ஒரு மதத்தை போதித்தார். மனிதனை மனிதனாக்கும் முயற்சியில்அந்த மகான் பெற்ற மகத்தான வெற்றிக் உல வரலாற்றிலேயே ஈடு இணைகிடையாது. – டால்ஸ்டாய்.

மதத்துறையிலும் லௌகீகத் துறையிலும் ஒரு சேர மாபெரும் வெற்றி ஈட்டியவர் உலக வரலாற்றிலேயே பெருமானர் முஹம்மது நபி ஒருவர்தான்.

– மைக்கேல ஹார்ட்

அரபிய நாட்டில் தோன்றி ஆண்டவன் ஒருவன் என்ற மரபினை வாழச் செய்த முஹம்மது நபியே போற்றி , தரையினில் பொதுமை மல்கிச் சகோதர நேயம் ஓங்கக் கரவிலா மறையைத் தந்த கருணையே போற்றி போற்றி – திரு.வி.க

உலகில் தோன்றியுள்ள அத்தனை மார்க்க போதகர்களிலும் முகம்மது நபி அவர்களே மாபெரும் வெற்றியாளர். – பிரித்தானிய கலைக்களஞ்சியம்

சர்வசக்தியும் படைத்த இறைவன் தனக்குத் துணையாக நிற்கிறான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நபிகள் நாயகம் அவர்களுக்கு இல்லாதிருந்தால் இவ்வளவு பிரம்மாண்ட சாதனைகளை – அவர் சாதித்திருக்க முடியாது.

– வில்லியம் மூர்

முகம்மது நபி அவர்கள் வாழ்க்கை தனி மனிதரின் செயல் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. – வின்விட் ரீட்

உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரனிலிருநது எழுப்பப் பண்ணுவார். அவருக்கு செவிமடுப்பீராக (உபாகமம் அதிகாரம்: 18 வசனம் :13,14,15.)

ஓரிறைவனையும் இறைத்தூதர் முஹம்மதையும் நான் நம்புகிறேன். என்பது இஸ்லாத்தின மிக அடிப்படையான எளிமையான கொள்கையாகும். இறைவனைப் பற்றிய அறிவார்ந்த சிந்தனையை எந்தச் சிலையாலும் – குறைத்திட முடியாது. நபியின் மாண்புகள் மனித பண்புகளுக்கு உகந்தது. அவருடைய வாழ்வும், வாக்கும் அவருடைய தோழர்களின் சமயமாக பரிணமித்தது. – எட்வர்ட் கிப்பன்.

உலகில் செல்வாக்கு மிகுந்தவர்களின் பட்டியலில் முதன்மையானவராக முஹம்மதை நான் தேர்வு செய்தது சில வாசகர்களுக்கு வியப்பையும், வினாவையும் எழுப்பலாம். சமயஞ்சார்ந்த மற்றும் சமயச்சார்பற்ற வட்டத்தில் மாபெரும் வெற்றி பெற்றவர் மனித சரித்திரத்தில் அவர் ஒருவரே

– மைக்கேல் எச். ஹார்ட்

இவ்வாறு பல அறிஞர்கள் நபிகள் நாயகத்தை தன் வாழ்நாளில் புகழ்ந்தது அவர்கள் மீது பாக்கள் பாடி, நாயகத்தைப் பற்றி உயரிய கருத்துகளை இந்த உலகத்திற்கு சொல்லி மகிழ்ந்தனர், சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் தங்கள் பாட்டனார் பெருமானார் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அவர்கள் பிறந்த நாளை மூன்றாவது பெருநாளாக நாங்கள் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம் என்று பல சமயங்களில் கூறியிருக்கிறார்கள், மேலும் ஆருயிர் நமது செய்கு நாயகம் அவர்கள் நாம் நபிகள் நாயகத்தின் மீது எவ்வாறு அன்பு கொள்ள வேண்டும் அவர்களுடைய பிறந்த தினத்தை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டும் என நமக்கு கற்றுத்தந்திருக்கிறார்கள்.

**ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “தாய், தந்தை,மனைவி, மக்கள், அனைவரை விடவும் என்னை அதிகமாக நேசிப்பவர்தான் உண்மையான முஉமீன்”என்பதாகக் கூறுகிறார்கள். எனவே, ஒருவர் ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஈமான் கொள்வதாயின் தன் தாயைவிட, தந்தையைவிட, பிள்ளையைவிட, பொருளைவிட, தொழிலைவிட, சம்பாத்தியத்தைவிட பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்புள்ளவராக இருக்க வேண்டும். இக்கூற்று விளையாட்டிற்கோ வேடிக்கைக்கோ கூறப்பட்டதல்ல. அந்த ரசூலுல்லாஹ்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய வார்த்தை. இதை அப்படியே பின்பற்ற வேண்டும்.**

**ரசூல்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ வேண்டாம் எனச் சொல்லப்படும் இக்கால கட்டத்தில் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அதிகம் புகழ்வதும் அர்கள் மீது காவியங்களைப் படைப்பதும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புகழ்படும் கூட்டங்களுக்குச் செல்வதும் நமது வாழ்வின் முக்கிய அம்சமாகக் கொள்ள வேண்டும். மேன்மையும் சிறப்பும் உண்டாகும்.**

என்ற சங்கைமிகு செய்கு நாயகத்தின் அமுதமொழிக்கு ஏற்ப ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நம் வாழ்நாளில் அதிகம் அதிகம் போற்றி புகழ்ந்து, அல்லாஹுவின் அருளையும், நாயகத்தின் அன்பையும் பெறுவோமாக ஆமீன், ஆமீன், யரப்பல் ஆலமீன்.

# வருமுன் காப்போம்!

**ஜம்இய்யத்தே உலமாயே ஹிந்த் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கை.**

இஸ்லாத்தை விட்டு இஸ்லாமியப் பெண்கள் நாளுக்கு நாள் வெளியேறிக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு பின் வரக்கூடிய விஷயங்களை செயல்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

இஸ்லாமிய ஷரீஅத் அடிப்படையில் இஸ்லாமியப் பெண்பிள்ளைகளிடத்தில் பர்தாவின் பழக்கத்தை ஏற்படுத்த ண்டேும், பர்தாவின் மூலம் வெட்கம், நாணம், பாதுகாப்பு போன்ற விஷயங்கள் அடங்கியுள்ளன என்கிற உணர்வை ஏற்படுத்த வேண்டும், இதற்காக தினந்தோறும் உள்ளங்களில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஸஹாபா பெண்மணிகளின் வாழ்க்கை சரிதைகள் (அல்லது) நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மனைவிமார்களின் மார்க்கப்பற்று அடங்கியுள்ள நூற்களை வீட்டில் வாசிக்க வேண்டும். இரு பாலர் கல்வி நிலையங்களில் **(CO-EDUCATION)** இல் சேர்ப்பதை முற்றிலுமாக தவிர்க்கவும். பெண்கள் மட்டும் பயிலும் கல்வி நிறுவனங்களில் சேர்க்க முழு முயற்சி மேற்கொள்ளவும், அங்கு கல்வித் தரம் குறைந்து இருப்பனும் சரியே. ஏனெனில் ஈமான், மற்றும் கற்பொழுக்கப் பாதுகாப்பு உலகக் கல்வியை விடவும் உயர்ந்தது. பள்ளி கல்லூரிகளில் பயிலும் பெண்பிள்ளைகளின் மார்க்கக்கல்வி பற்றி கவனம் எடுக்க வேண்டும். அதற்காக நேரம் ஒதுக்கி பெண் ஆலிமாவின் மூலம் மார்க்க கல்வியை கற்பிக்க முயற்சிக்க வேண்டும். மேலும் அவர்களின் பழக்க வழக்கங்களில், நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக ஒழுக்கம் சார்ந்த நூற்களை அவர்களைப் படிக்கச் செய்யவும்.

டியூசன் போன்றவற்றில் ஆடவர்களுடன் கலந்து பயில்வதற்கு முற்றிலும் அனுமதிக்க வேண்டாம். பாடத்தில் சந்தேகம் தீர்ப்பதற்காக ஆண் ஆசிரியர்கள், அந்நிய ஆண்களின் வீட்டிற்குச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டாம். கல்லூரி போய், வர பொறுப்புதாரிகள் தாமாகவே அழைத்துக்கொண்டு போய் வரவும். ஆன்ட்ராய்டு தொலைபேசி மற்றும் இரு சக்கர வாகனம் போன்றவை வாங்கித்தர வேண்டாம், ஏனெனில் இதன் மூலம் வெட்கமற்ற மற்றும் பாவங்களின் வாசல் திறக்கப்படுகிறது. தொலைபேசிக்கு ரீசார்ஜ் செய்ய, அல்லது ஜெராக்ஸ் எடுப்பதற்காக மாற்றார்களின் கடைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டாம். மேலும்

கல்லூரிகளிலோ, அதன் வெளியிலோ அமைந்துள்ள சிற்றுண்டி (கேன்டீன்களுக்கு) அவர்கள் செல்லாமல் இருக்க முயற்சிக்க வேண்டும். மாற்று மத ஆண்களின் தோழமையை தடைசெய்யவும், மேலும் மாற்று மதப் பெண்களின் தோழமையை விட்டும் பாதுகாக்கவும், ஏனெனில் இதன் மூலம் பலவிதமான பிரச்சனைகள், அந்நிய ஆண்களின் தொடர்புகள் ஏற்படக்கூடும். ஏற்கனவே மாற்று மதப்பெண்களின் தோழமை இருந்தால் நமது பெண்பிள்ளைகளுக்கு இஸ்லாத்தின் அழைப்பு விடுக்கும் அளவிற்கு ஈமானியப்பற்றையும், மார்க்கப்பற்றையும் வழங்கவும். வீட்டில் பெண்பிள்ளைகளுக்கு உள்ள உளவியல் ரீதியான பிரச்சனைகளை, சிரமங்களை அறிந்து அதை முழு கவனத்தோடு சரி செய்ய முயற்சிக்கவும். இல்லையென்றால் பெண்கள் தங்கள் பிரச்சனைக்கான தீர்வை வீட்டிற்கு வெளியே தேடிக்கொள்வார்கள்.

படிப்பற்கு இணையத்தளத்தின் அவசியம் ஏற்படுமாயின் அவர்களின் இணையத்தளத்தின் பயன்பாட்டை கவனிக்கவும். ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப் போன்ற செயலிகளை பயன்படுத்த முற்றிலுமாக அனுமதிக்கக வேண்டாம். காரணம், இவைகளின் மூலம் தான் வழிகேடுகளும் பிரச்சனைகளும் ஆரம்பமாகின்றன

முஸ்லிம் பெண்கள் மாற்றார்களுடன் திருமணம் செய்வது ஹராமாகும், சேர்ந்திருப்பது விபச்சாரத்தின் பாவமாகும். சினிமா போன்றவைகளைப் பார்த்து ஏமாந்து விட வேண்டாம். நிக்காஹ் செய்யும் அளவிற்குத் தகுதி அடைந்துவிட்டால் விரைவாக நிக்காஹ்விற்கான ஏற்பாட்டினை செய்து விடவும். மணமக்கள் இல்லற வாழ்க்கையை சிறிது காலத்திற்குப் பிறகு தொடங்கினாலும் சரியே, ஏனெனில் இதன் மூலம் மன அமைதி கிடைகக பெறும், மனம் இங்கும் அங்கும் அலைபாய்வதை விட்டும் பாதுகாக்கப்படும். மேலும் நிக்காஹ்வின் ஏற்பாடு செய்யும் விஷயத்தில் சடங்கு சம்பிரதாயங்கள் செய்யாமல் இருப்பது சிறப்பிற்குரியது. அவர்களின் ஈமானின் உறுதிக்காக தினந்தோறும் இரண்டு ரக்அத்து ஹாஜத்து நஃபில் தொழுது அல்லாஹ்விடம் துஆ கேட்கவும். அல்லாஹ் இதன்படி அமல் செய்ய வாய்ப்பினை வழங்குவானாக ஆமீன்.

(குறிப்பு: நமது உயிரினும் மேலான வாப்பா நாயகம் அவர்கள் காலமெல்லாம் அறிவுறுத்திவந்ததை இப்போதுதான் மார்க்க அறிஞர்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.)

# சற்குரு சரித்திரம் 5

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

நம் சற்குரு நாயகம் அவர்கள் அறபா தேசியப் பாடசாலை, மற்றும் போர்வை, அக்குரஸ்ஸா என்ற இடத்தில் உள்ள ஸாதாத் வித்தியாலயம் பள்ளியினும் பணியாற்றி உள்ளார்கள். அதன்பின் அவர்கள், குருநாகல் பண்டார தொஸ்வத்தை என்ற இடத்தில் உள்ள பள்ளிக்கு முதல்வராக (அதிபராக) பதவி உயர்வு பெற்றுச் சென்றார்கள். அவ்வூரில் மரங்கள் மிகவும் பிரம்மாண்டமாக வளர்ந்திருந்தது. பார்க்கவே மனதிற்கு ரம்யமாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவ்விடத்திற்கு என்னைக் கூட்டிக்கொண்டுபோகிறேன் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்குள் ஏனோ மரணம் அவர்களை அழைத்துக் கொண்டு போய்விட்டது. அங்கு வேலை செய்த போதுதான் பள்ளி மாணவர்களுடன்சேர்ந்து தோட்டக்கலைப் பாடமாக வெங்காயம் நடவு செய்தார்களாம். வெங்காயம் நன்றாக விளைந்து நிறைய வெங்காயம் கிடைத்தது. அதை அப்படியே அனைத்து மாணவர்களுக்கும் பிரித்துக் கொடுத்து விட்டார்களாம். அதில் சில மாணவர்கள் தங்கள் பங்கிற்குக் கிடைத்த வெங்காயத்தை கடைத் தெருவில் கூறுகட்டி விற்றும் இருக்கிறார்கள். இதைக் கண்ட சக ஆசிரியர்கள் மௌலானா அவர்கள் மாணவர்களிடம் வேலை வாங்கி, வெங்காயத்தைப் பயிர் செய்து அதை மாணவர்களிடமே கொடுத்து விற்கச் சொல்லி காசு சம்பாதிக்கிறார் என்று பெரும் பொய்ப்பிரச்சாரத்தை கிளப்பி விட்டார்கள். இதனால் மனமுடைந்து போன நமது சற்குரு நாயகம் அவர்கள் பள்ளிமாணவர்களிடம் இனி நம் பள்ளியில் தோட்டக்கலைப் பாடம் இல்லை என்றும், நானும் இன்னும் ஒரு வருடத்திற்குள் இந்தப் பள்ளியை விட்டுப் போய்விடுவேன் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதன்படியே அவர்கள் அப்பள்ளியைவிட்டுச் சென்று விட்டார்கள். பள்ளி நிர்வாகத்திலிருந்த அவர்களை அரசு கல்வித்துறை வட்டார கல்வி அதிகாரியாக நியமித்து விட்டது. எல்லாப் பள்ளிகளுக்கும் சென்று தங்கி நிர்வாகம், கல்வி ஆகிய பணி எல்லாம் எப்படி உள்ளது என்று ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை தருவதுதான் அவர்கள் வேலையாக இருந்தது.

அதையும் நல்லபடி திறம்பட செய்தார்கள் நம் சற்குரு நாயகம். சில பள்ளிகளுக்கு வெகுதூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கும். இவர்களுக்கு முன்னிருந்த அதிகாரிகள் அதுமாதிரி இடங்களுக்கு போவதேயில்லையாம்.

ஆனால் நம் சற்குரு நாயகம் அப்பள்ளிகளுக்கும் தூரத்தைப் பொருட்படுத்தாமல் நடந்தே சென்று வருவார்களாம். அப்பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் எல்லாம் வியந்து போவார்களாம். மற்றும் சில பள்ளிகளுக்கு பஸ்ஸில் போக வேண்டியிருக்கும்.

பஸ்ஸும் அடிக்கடி இருக்காதாம். வெகு நேரம் பஸ் ஸ்டாப்பில் காத்துக் கிடந்து பிறகு பஸ் ஏறி வருவார்களாம்.

இவர்கள் வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமனமான இடம் புத்தளம் மாவட்டம் சிலாபம் என்ற ஊரில்தான். இவர்கள் அங்குப் பணியில் இருந்த போது என்னையும் திண்டுக்கல் கலீபா அப்துல் கறீம் ஆலிம் அண்ணன் அவர்களையும் காரில் அழைத்துச் சென்றுள்ளார்கள். அங்குள்ள ஒரு வீட்டில் எங்களுக்கு உணவும் அளிக்கப்பட்டது. அந்த ஊரில் கீழக்கரை குதுபுல் மத்ஹரி நாயகம் அவர்களின் உறவினரது தர்கா ஷரீபும் இருந்தது. பிற்காலத்தில் அது இடிக்கப்பட்டு விட்டதாகக் கேள்வி.

அதன்பின் நம் சற்குரு நாயகம் அவர்களை விடுதலைப் புலிகள் அதிகம் உள்ள அநுராதபுரத்திற்கு மாற்றி விட்டார்கள். அங்கு ஒவ்வோர் இடத்திற்கும் சென்று பள்ளிகளை சோதனையிடுவதே மிகவும் சிரமான காரியமாக இருந்ததாம். திடீர் திடீர் என விடுதலைப்புலிகளின் துப்பாக்கி சுடும் சப்தம் கேட்குமாம். அப்படி அவர்கள் பணியில் இருக்கும் போதுதான் அவர்களின் அருமைத் தந்தை நாயகம் அவர்களின் 40 ஆவது தினத்திற்கு இந்தியாவுக்கு முதன் முதலில் கப்பலில் ஏறி ரயில் மார்க்கமாக திருச்சி வந்தார்கள்.

இப்படி வந்த சமயத்தில்தான் கலீபா அப்துல் கறீம் அண்ணன் அவர்கள் "நாங்களோ எங்கள் ஷெய்கை இழந்து பரிதவித்துக் கொண்டிருக்கிறோம். தாங்களாவது வருடா வருடம் வந்து போக வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நம் சற்குருநாயகம் அவர்கள், "நாம் பணியில் இருப்பதால் வந்து போவது சிரமாக இருக்குமே" என்றார்கள். கலீபா. அப்துல் கறீம் அண்ணன் அவர்கள் விட்டபாடில்லை. மிகவும் அவர்களை வற்புறுத்தி வேண்ட, அவர்களும் இசைந்து எங்களுக்கு லீவு கிடைக்காது. வருடாவருடம் நோன்பில், அதாவது ரமளானில் 1 மாதம் வேண்டுமானால் வருகிறேன் என்றார்கள்.

அதன்பின் வருடாவருடம் ரமளானில் வந்து செல்வது அவர்கள் வழக்கமானது. இப்படி சென்று கொண்டிருக்க, அனுராதபுரம் பஸ்ஸ்டாண்டில் விடுதலைப் புலிகளின் துப்பாக்கி சூடு நடந்து பெரிய கலவரமாக இருந்தது. அதனால் சற்குரு நாயகம் குடும்ப

நபர்களும் நாங்களும் வேண்டிக் கொண்டதின் பேரில் அவர்கள் வேலையை விட நேர்ந்தது. அது முதல் வருடத்தில் மூன்று மாதங்கள் தமிழக சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். அன்றிலிருந்து தொடர்ந்து அவர்கள் ஆயுட் காலம் வரை இந்தியா வந்து போய்க்கொண்டிருந்தார்கள். நமது சற்குருநாயகம் அவர்கள் வேலையை விட்டதால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பிராவிடண்ட் பங்கு பணம் கூட கிடைக்கவில்லை.

சற்குரு நாயகம் அவர்கள் பணியில் இருந்த போது, அதாவது அனுராதபுரத்தில் வேலையில் இருந்தபோது, நானும் கலீபா. அப்துல்கறீம் அண்ணன் அவர்களும் சிலோனிற்கு சற்குருநாயகம் அவர்கள் இல்லத்திற்குச் சென்றிருக்கிறோம். இரண்டுநாட்கள் எங்களுடன் தங்கி விட்டு இடையில் ஒருநாள் வேலைக்குப் போய் வருவார்கள். அனுராதபுரத்திலிருந்து கொழும்புவிற்கு பஸ்ஸில் நின்று கொண்டே வந்து, திரும்ப கொழும்பிலிருந்து வெலிகமாவிற்கு பஸ்ஸில் நின்று கொண்டே வருவார்களாம். நாங்கள் சற்குரு நாயகம் அவர்கள் இல்லத்தில் படுத்திருந்தோம். எங்கள் தூக்கம் கெட்டுவிடக் கூடாதே என பின்பக்கமாக உள்ள அவர்களின் பெரிய நானா (சகோதரர்) வீட்டுப் பக்கம் வந்து அடுப்படிப் பக்கமாக வரும்போது அவர்களின் கால் அங்குள்ள பாத்திரங்களின் மேல்பட்டு தடார் என்ற பெரும் சத்தம் ஏற்பட்டது. நானும் கலீபா. அப்துல் கறீம் அண்ணன் அவர்களும் பதறிப்போய் எழுந்து உட்காந்த்து கொண்டோம்.

என்ன சிராஜுதீன், உள்ளே சப்தம் கேட்கிறது என்று கலீபா. அப்துல் கறீம் அண்ணன் கேட்க, நானும் ஒன்றும் தெரிய வில்லையே என்றேன். மெல்ல லைட்டைப் போட்டோம். சற்குருநாயகம் சிரித்துக் கொண்டே எங்கள் அறைக்கு வந்தார்கள். என்ன வாப்பா சப்தம்? என்றேன். அவர்கள் சிரித்துக் கொண்டே நடந்ததைச் சொன்னார்கள். எல்லோரும் ஒரு கணம் வாய்விட்டுச் சிரித்தோம்.

நாங்கள் ஊர் திரும்ப ஆயத்தம் ஆகிக் கொண்டிருந்த போது, அதற்கு முந்தைய தினம் மாலையில் கண்டி முஸ்லிம் ஹோட்டல் உரிமையாளர் பாட்சா முதலாளி சற்குரு வாப்பா நாயகம் அவர்கள் வீட்டிற்கு வந்தார். வந்தவர் எங்களைப்பார்த்து விட்டு எங்களை கண்டிக்கு வரும்படி வற்புறுத்திக் கூப்பிட்டார். சற்குரு வாப்பா நாயகம் அவர்கள், சரி நாளை அவர்கள் புறப்படுகிறார்கள் அப்படியே கண்டிக்கு வந்து விட்டுச் செல்வார்கள் என்று சொல்லி விட்டார்கள்.

கண்டி பாட்சா முதலாளி வீட்டில் நாங்கள் தங்கியிருக்கும்போது ஏற்பட்ட ஒரு நகைச்சுவை செய்தியை பிறகு எழுதுகிறேன்.

மறநாள் காலை நாங்கள் புறப்பட்டோம். சற்குரு வாப்பா நாயகம் அவர்கள் வீட்டிற்குப் பின்புறம் ரயில்வே ஸ்டேஷன். முன்கூட்டியே அண்ணன் மார்களின் பிள்ளைகளில் யாரையாவது ஸ்டேஷனுக்கு அனுப்பி எங்களுக்கு டிக்கட்டை முற்கூட்டியே எடுத்து வைத்து விடுவார்கள். பிறகு மணி அடித்ததும் ஸ்டேஷனுக்குச் செல்வோம். சற்குரு வாப்பா நாயகமும் உடன் வருவார்கள். வருவது மட்டுமல்ல ரயில் வந்ததும் ஓடிச் சென்று பாய்ந்து ரயில் ஏறி எங்களுக்கு உட்கார இடம் பிடித்தும் தருவார்கள். சுப்ஹானல்லாஹ்.

நாங்கள் கொழும்பு சென்று வண்டிமாறி கண்டி சென்று விட்டு அங்கு ஒரு நாள் தங்கிவிட்டு பிறகு கொழும்பு வந்து ஏர்போர்ட் செல்வதற்கும் அங்கு ஒரு நபரை ஏற்பாடு செய்து வைத்திருப்பார்கள். *(வரலாறு வளரும்)*

---

# நற்குணமே நாயகமே!

♦ பெருமானார் அவர்களுக்கு அரசர்கள் சிலர் சன்மானமாகக் கொடுத்த குதிரை, ஒட்டகை, கோவேறு கழுதை, கழுதை முதலானவற்றில் வாகனிப்பார்கள்.

♦ நிச்சயமாகவே பூமியின் கருவூலங்களின் திறவுகோல்கள் (அனைத்தும்) பெருமானார் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தும் பசியினால் அவர்களின் வயிற்றின்மீது கல்லை வைத்துப் புடைவையினாற் கட்டிக் கொள்வார்கள்.

♦ பெருமானார் அவர்களுக்காக மலைகள் தங்கமாக அவர்களை நாடி வந்தன. ஆயினும் பெருமானார் அவர்களோ அவைகளை வேண்டாமென்று மறுத்தார்கள்.

♦ மேலும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீணான (காரியம் முதலானதில் ஈடுபடுவ)தைச் சுருக்கிக் கொள்வார்கள்.

♦ அவர்களைச் சந்தித்தவர்களை (முதலில்) ஸலாமைக் கொண்டே (எதையும்) ஆரம்பிப்பார்கள்.

♦ ஜும்ஆவின் குதுபாவை (பிரசங்கத்தைச்) சுருக்கிக்கொள்வார்கள்.

♦ சிறந்தவர்களுடன் நட்புக் கொள்வார்கள். கண்ணிய முடையவர்களுக்குச் சங்கை செய்வார்கள். அவர்களுடன் பரிகாசம் பண்ணுவார்கள்.

♦ அல்லாஹுவுக்குப் பொருத்தமான அவன் விரும்பிய உள்ளமையையேயன்றி அவர்கள் (எதையும்) சொல்லமாட்டார்கள்.

**(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் பர்ஸன்ஜிய்ய் மவ்லிது மொழி பெயர்ப்பு)**

# பல்லக்கு தம்பி வலீ(ரஹ்)

(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.ஸி. ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)

இதன்பின் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பல்லக்கு வலீயுல்லாஹ் அவர்கள் வைகறைத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்போது இஸ்லாமிய மீன்பிடி மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குப் புறபட்டுக்கொண்டிருந்தனர். இவர்கள் தம் மீனவர்களைப் பார்த்து என்னையும் கடலுக்குக் கூட்டிப்போங்கள். நானும் உங்களுடன் வருகிறேன் என்று பிடிவாதமாகக் கூறவே அவர்களும் வலீயுல்லாஹ் அவர்களைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு சென்றார்கள். சிறிது தூரம் சென்றதும் வழியில் முயல்தீவில் அவர்களை இறக்கி விட்டு, தாங்கள் இங்கேயே இருங்கள் நாங்கள் நடுக்கடலுக்குச் சென்று மீன்பிடித்து வரும்போது அழைத்துச் செல்கிறோம் என்று கூறிச் சென்று விட்டார்கள்.

மீனவர்கள் மீன்களை பிடித்துக் கொண்டு முயல் தீவிற்கு வந்தார்கள். வாருங்கள் ஊருக்குப் போகலாம் என்று வலீயுல்லாஹ் அவர்களை அழைத்தார்கள். ஆனால் வலியுல்லாஹ் அவர்களோ, ஊர்வர மறுத்து விட்டார்கள். எவ்வளவோ மன்றாடிக் கூப்பிட்டும் அவர்கள் படகில் ஏறவில்லை. சரி, நாம் கரைக்குச் செல்வோம். ஊரில் உள்ள அவர்களின் உறவினர்களிடம் சொல்லி அவர்களை அழைத்து வந்து இவர்களைக் கூட்டிக் கொண்டுபோகலாம் என்று கூறிச் சென்று விட்டார்கள். மீனவர்கள் கரையை அடைந்ததும் அவர்கள் அனைவரும் பெரும் அதிர்ச்சி அடைந்தார்கள். காரணம் நம் பல்லக்கு தம்பி வலீயுல்லாஹ் அவர்கள் முன்போல் கரையில் உலாவிக் கொண்டு புன்முறுவலுடன் இவர்களைத் திரும்பிப் பார்த்தார்கள்.

என்னநடந்தது? இவர்கள் எப்படி கடலில் நடந்துவந்தார்கள்? என்று வியந்து ஊர்மக்களிடம் இவ்வுண்மையைச் சொன்னார்கள். இந்தச் செய்தி அரூஸிய்யா மதரஸாவில் ஓதிக் கொடுத்துக் கொண்டிருந்த அஹமது அப்துல் காதிர் ஆலிம் சாஹிபு அவர்களுக்கு எட்டியது. அவர்கள் கையில் திருக்குர்ஆனை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். அந்த மீனவர்களிடம் அவர்கள் சொல்வது, கண்டது எல்லாம் உண்மை என்று இந்த திருக்குர்ஆன் மீது சத்தியம் செய்யச் சொன்னார்கள். அந்த மீனவர்களும் சத்தியம் செய்து சொல்லவே ஆலிம் சாஹிப் அமைதியடைந்தார்கள்.

முன்னர் ஓடக்காரப் பள்ளியில் நிகழ்ந்த நிகழ்ச்சி பற்றி சற்று சந்தேகத்தில் இருந்தவர்களுக்கு இச்சம்பவம் ஐயத்தெளிவை ஏற்படுத்தியது. இதன்பின் பல்லக்கு தம்பி வலீயுல்லாஹ் அவர்களின் புகழ் மணம் ஊரெங்கும் வீசத் தொடங்கியது. அந்தப் புகழ் மணத்தை நுகர்ந்து புளகாங்கிதமுற்ற சுந்தர பாண்டியன் பட்டணம் முஹம்மது முஸ்தபா ஆலிம் சாஹிப் அவர்களுக்குக் கவி பொங்கியது. நேரே பல்லக்கு தம்பி வலீயுல்லாஹ் அவர்கள் முன்வந்து அமர்ந்து கவி மழை பொழிந்தார்கள். அக்கவிமழையில் முன்பு கூறிய வற்றில் ஒரு துளி.

*கடல்மீது கப்பலின்றிக் கால் நடையாய் நடந்துவந்த*

*காமிலுவே யாஷைகுனா ஸனதீ பல்லக்குவலீ*

என்ற கண்ணியாகும்.

பல்லக்கு வலீயுல்லாஹ் அவர்களிடம் ஆசி வேண்டி மக்கள் சாரி சாரியாக வந்து கொண்டிருந்தார்கள். ஒரு தடவை வாணிபத்தின் பொருட்டு சென்னை புறப்பட விரும்பிய கீழக்கரை சையது முஹம்மது ஆலிம் புலவர் அவர்கள் வலீயுல்லாஹ் அவர்களிடம் வந்து பயணம்சொன்னார்கள். அதைக் கேட்டு சற்று நேரம் தலை கவிழ்ந்திருந்த வலீயுல்லாஹ் அவர்கள், பின்னர், தமக்குத் தாமே பல்லக்குத்தம்பி ! வந்து நிற்பவர் ஒரு ஆலிம், ஹாஃபிளு, நாளிரு, இவரைத் தாமதப் படுத்தலாமா? என்று சொல்லிக் கொண்டு ஃபீஅமானில்லாஹ், பாரக்கல்லாஹு ஃபீ திஜாரத்திக வ தவ்வல உம்ரக்க என்று இறைஞ்சி வழியனுப்பி வைத்தார்கள். அப்பயணத்தில் ஆலிம் புலவருக்கு அபரிமிதமான இலாபம் கிடைத்தது.

இன்னொரு சமயம் இலங்கையில் வாழ்ந்த நண்பர் ஆலிம் புலவருக்கு தம் பிரச்சினையைப் பற்றி எழுதி அப்பிரச்சனைகள் தீர வலீயுல்லாஹ் அவர்களிடம் வேண்டிக் கொள்ளுமாறு வேண்டியிருந்தார். அந்த தபாலுடன் ஆலிம்புலவர் பல்லக்கு தம்பி வலீயுல்லாஹ் அவர்களிடம் செல்ல, அவர்கள் வழியில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் நண்பரின் தபால் விஷயத்தைச் சொல்லி வேண்டிக்கொண்டார். வலீயுல்லாஹ் அவர்கள் தம் காலணியை கழற்றி விட்டு வெறுங்காலுடன் நின்று அவரது நண்பருக்காக பிரார்த்தித்தார்கள்.

வேறொருநாள் கீழக்கரை கே.டி.எம். ஹாஜியார், வலியுல்லாஹ் அவர்களைக் காண அவர்கள் இல்லம் சென்ற போது வலீயுல்லாஹ் அவர்கள் ஹாஜியாரைப் பார்த்து, உமக்குப் பிள்ளை உண்டா? என்று கேட்க, அவர் மௌனமாக நிற்க, நீர் பிள்ளை பெறுவீர்! என்று மூன்று முறை கூற அவருக்கு பிள்ளை கிடைத்தது

*(வருவார்கள்)*

## தர்ஹா கட்டட கமிட்டி ஆலோசனைக் கூட்டத்தில் சங்கைக்குரிய இளைய நாயகமவர்களின் அருளுரை:

# ஏழழகு... அது பேரழகு!

சென்ற 23.08.2024 வெள்ளிக்கிழமை இந்திய நேரப்படி மாலை 6.30 மணி முதல் 9 மணி வரை இணைய வழியே ஜும் செயலி மூலம் நமது உயிரினும் மேலான **சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்)** அவர்களின் புனித தர்ஹா ஷரீஃப் கட்டடம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, நமது கண்மணி சங்கைக்குரிய இளைய வாப்பா நாயகமவர்கள் சீரிய தலைமை தாங்கி, ஆசியுரை அருளினார்கள். கூட்டத்தில் சங்கைக்குரிய திருக்குடும்பத்தார், கண்ணியத்திற்குரிய கலீபாப் பெருமக்கள், அன்பிற்கினிய ஆத்தும சகோதரர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். கூட்டத்தை ஜனாப். K.S.A. அப்பாஸ் ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் அறிமுக உரையாற்றித் தொகுத்து வழங்கினார்கள். தொடர்ந்து, கலீபாப் பெருமக்கள், நிர்வாகிகள், மூத்த ஆத்தும சகோதரர்கள் தர்ஹா கட்டுமானத்தின் சிறப்பு, அதில் நமது பங்களிப்பின் அவசியம் குறித்து உரையாற்றினார்கள்.

இவையனைத்திற்கும் முதன்மையாக, முத்தாய்ப்பாக, **சங்கைக்குரிய இளைய வாப்பா நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள் வழங்கியருளிய ஆசியுரை:**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வஸல்லிம்.

முதலாவதாக, எமது ஸலாத்தை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

இந்த ஜும் மீட்டிங், தர்ஹா சம்பந்தப்பட்ட இரண்டாவது மீட்டிங் ஆக இருக்கின்றது. அப்பா நாயகம் அவர்களுடைய தர்ஹா கட்டட வேலைகள் சிறப்பாக ஆரம்பித்தும் உள்ளது. அது தொடர்பான சில செய்திகளைச் சுருக்கமாக இங்கே சொல்வதற்கு விருப்பப்படுகிறோம்.

முதலாவதாக, நிறையப் பேர் கேட்கும் கேள்வி, தர்ஹா கட்டடப்பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள ஆர்க்கிடெக்ட் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன், என்பதுதான்.

அதாவது, சென்ற முறை சென்னை சென்றிருந்தபோது, குறிப்பிட்ட அந்த ஆர்க்கிடெக்டைச் சந்திப்பதற்கு வாய்ப்பு அமைந்தது. இவர், இந்தக் கட்டுமானத் துறையில் 40 வருட அனுபவம் பெற்றவராக இருக்கிறார். இவர் துபை, சௌதி உள்பட பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றி உள்ளார். அதாவது, பசிபிக் கன்சல்டன்ட், E.T.A. துபை, E.T.A.ஆர்க்கிடெக்ட், சிங்கப்பூர் போன்ற கம்பெனிகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். அதிலும் குறிப்பாக, இவர், வாப்பா நாயகமவர்களின் மகத்துவத்தை முழுமையாக அறிந்து வைத்திருக்கிறார். இதுதான் எங்களுக்கு இது முக்கியமான செய்தியாக இருக்கின்றது. ஏனென்றால், நமது சபைப் பிள்ளைகள் அல்லாமல் மற்றவர்கள் நமது வாப்பா நாயகமவர்களின் மகத்துவத்தை அறிந்திருப்பது குறைவாக உள்ளது. இது ஹக்காக நமக்கு, இப்படியொரு நல்ல மனிதர் ஆர்க்கிடெக்டாக அமைந்திருக்கின்றார்.

மேலும், சென்ற முறை ஜூம் மீட்டிங் (தர்ஹா சம்பந்தமான முதல் மீட்டிங்) நடைபெற்ற போது, தர்ஹா ஷரீஃப் இப்படி இப்படியெல்லாம் அமைய வேண்டும், இது இதுவெல்லாம் இருக்க வேண்டும் என்று லிஸ்ட் முடிவு செய்தோம். அதனை எங்களது Requirement–ஆகக் கொடுத்தோம். அது தொடர்பாக ஆர்க்கிடெக்டிடம் தொடர்பு கொண்டு பேசியபோது, நமது பட்டியலில் உள்ள எல்லாம் ஒன்றாக அமையுமாறு, நாம் எதிர்பார்ப்பதைப் போல், மேலும் அதைவிட அழகானதொரு கட்டடத் திட்ட வரைபடத்தை எங்களுக்கு அவர் போட்டுத் தந்துள்ளார்.

எனவே, கட்டட வடிவமைப்பைப் பற்றிச் சுருக்கமாக இங்கு கூறுகிறேன். அந்த வரைபடம் தொடர்பான படங்களை, பின்பு ஷாஜஹான் மாமா அவர்கள் போட்டுக் காட்டுவார்கள் என நினைக்கின்றேன். *(அதன்படியே ஜனாப். K.S.A. ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், ஆத்தும சகோதரர் முஹம்மது சாதிக் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் வாயிலாக, புனித தர்ஹா கட்டடத் திட்ட வரைபடங்களை மீட்டிங்கின்போது பகிர்ந்து விளக்கமளித்தார்கள்).* முதலாவதாக நாங்கள், வாப்பா நாயகமவர்களின் மக்பராவும் மஸ்ஜிதும் ஒரே கட்டமைப்புக்குள் வரவேண்டும் என்று கூறியிருந்தோம். ஏனென்றால், வெளியாட்கள் வரும்போது மஸ்ஜிதுக்குள் மட்டும் வந்து தொழுதுவிட்டுச் சென்று விடாமல் ஜியாரத்தும் செய்து செல்ல வேண்டும் என்பது எங்கள் நோக்கமாக இருக்கின்றது. அதே போன்று, காலத்திற்கேற்றவாறு கட்டடத்தை விரிவுபடுத்த நேரிடும். அந்தச் சிரமம் வாராத வகையில், ஒருமுறை கட்டும்போதே விரிவான வகையில் ஒரே நேரத்தில் 1500 – 2000 பேர் தொழுவதற்கும் ஜியாரத் செய்வதற்கும் ஏதுவான இடவசதி தேவையாக இருக்கின்றது. ஆகவே, மஸ்ஜிதும் வாப்பா நாயகமவர்களின் மஸார் ஷரீஃபும் ஒரே கட்டமைப்புக்குள் வந்தால்தான் இது சாத்தியமாகும் என்று நாங்கள் நினைத்தோம்.

மற்றது, வேறு சிலர் இன்னொரு கேள்வியொன்று கேட்டார்கள், மஸ்ஜிது மற்றும் மஸார் ஷரீஃப் கட்டமைப்பிற்கு அமைக்கப்படுகின்ற ஏழு நுழைவாயில்களின் காரணம் என்ன என்று கேட்டார்கள். ஏழு நுழைவாயில்கள் என்பதில் ஏழு என்னும் நம்பர் எங்களின் எண்ணத்தில் நிரம்பக்காலம் இருக்கின்ற ஓர் எண் தான். இது பூரணத்தைக் குறிக்கும்.

பூரணமான இன்ஸானைத் தான் மள்ஹருல் ஹக் என்று கூறுவோம். மள்ஹருள் ஹக்கைப் பொறுத்தவரை ஏழு ஸிஃபத்துகள் வெளியாகும். நாம் ஹக்கை அறிய வேண்டும் என்றால், நமக்கு என்ன தெரிய வேண்டும் என்றால், லாயிலாஹ இல்லல்லாஹ். லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற அந்தத் தலம் இன்ஸான் அளவில் எங்கே வெளியாகின்றதென்றால், இன்ஸானுடைய மூளைப்பகுதியில் வெளியாகின்றது. இங்கிருந்து தான் மனிதனின் சிந்தனைகளும் உண்டாகின்றன. ஆகவே, இந்த மூளைப் பகுதியிலிருந்து தான் ஏழு ஸிஃபத்துகளும் வெளியாகின்றன. ஏழு ஸிஃபத்துகளும் காது, கண், நாசி, வாய் போன்றவற்றிலிருந்து வருகின்ற கேள்வி, பார்வை, வாசம், பேச்சு மேலும் உடலிலிருந்து வருகின்ற உயிர், கல்பிலிருந்து வருகின்ற ஞானம், இஸ்முல் அஃலம் என்று சொல்கின்ற ரஹ்மத்தாகிய ஹக்கின்மேல் வைக்கின்ற இஷ்க், இவை அனைத்தும் கூட்டிப் பார்க்கும்போது ஏழு இருக்கின்றன. இவையெல்லாம் சாத்தியமான நமது வாப்பா நாயகம் அவர்களே மள்ஹருல் ஹக்காக இருக்கின்றார்கள். ஆகவே, வாப்பா நாயகமவர்களின் மஸார் ஷரீஃபின் நுழைவாயில்களை ஏழாக அமைத்துக் கொண்டோம். இயற்கையாகவே இந்த ஏழு நுழைவாயில்களும் வாப்பா நாயகமவர்களின் மக்பராவைச் சுற்றியே அமைந்திருக்கும். எந்த வாயில் வழியே நுழைந்தாலும், வாப்பா நாயகமவர்களின் மக்பராவை அடைகின்ற வகையிலும், எந்த நேரத்திலும் வாப்பா நாயகமவர்களைச் சுற்றிவருகின்ற மாதிரியும் அந்த அமைப்பு இருக்கின்றது. அந்த வரைபடங்களைப் பார்க்கின்றபோது அது உங்களுக்கு விளங்கும். இப்போது ஆர்க்டெக்ட் நமக்குத் தந்திருப்பது, Conceptual Drawing என்று சொல்வோம். அடுத்த கட்டமாக, மக்பராவின் உள்ளமைப்பு எப்படியிருக்கும்? மக்பராவின் உயரம், அதன் இடப்பரப்பு, மியூஸியம், லைப்ரரி போன்றவற்றிற்கான இட ஒதுக்கீடு ஆகியவையெல்லாம் இதற்கு அடுத்துத் திட்டமிடப்பட உள்ள Structural Drawing என்று சொல்வார்களே, அதிலே இவற்றிற்கான விவரங்கள் நாம் காண முடியும். இதற்காகத் தான் திறன்மிகுந்த Structural Engineer-ஐத் தேர்வு செய்ய முனைந்து கொண்டிருப்பதாகத்தான், நாம் கடைசியாக நமது ஆர்க்கிடெக்டிடம் பேசினபோது சொன்ன செய்தி.

மற்றபடி சுருக்கமாக எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டோம். ஏதாவது சந்தேகமிருந்தால் கேட்டுக் கொள்ளலாம். வாப்பா நாயகமவர்களின் தர்ஹா மஸார் ஷரீஃப் நல்லபடியாக முடிவடைய வேண்டும். அதுவே எங்களுடைய ஹாஜத்தாக இருக்கின்றது.

இறுதியாக, உங்கள் அனைவருக்கும் நிறைய பரக்கத்தும் செழிப்பும் வாழ்வு நிறையவும் ஹக்கு அருள்புரியுமாக...! (ஆமீன்).

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

**தொகுப்பு : அ.நைனார் முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி.**

# மீலாதுன்னபி விழா!

மீலாதுன்னபி விழா மெய்ஞ்ஞானத் திருவிழா
பிரபஞ்சப் பெருவிழா பெருமானார் வரும்விழா
தீராத ஆவலால் நபிநேசக் காதலால்
கட்டாயம், ஆதலால்... (மீலாதுன்னபி விழா)

மவ்லீது ஓதலால் ஸலவாத்துப் பாடலால்
கந்தூரி நேசத்தால் கஸ்தூரி வாசத்தால்
உரையாற்றிப் போற்றலால் உயிரூட்டும் ஓர் விழா!
பூமானைப் புகழ்வதால் பொன்னாடை பெறும்விழா!
கொண்டாடு சேவையால் கோமானின் விழா! (மீலாதுன்னபி விழா)

இஸ்லாத்தைத் தந்ததால் இறையோனைச் சொன்னதால்
மறைதந்த வள்ளலால் நீ மனிதன் என்பதால்
உயிராக உள்ளத்தால் உற்சாகத் துள்ளலால்
உம்மத்தின் கடமையாய் கொண்டாடு உரிமையாய்

நபிபோற்ற எல்லையா? இல்லையே நீ வா... (மீலாதுன்னபி விழா)
நபிநாதர் பிறப்பதால் இறைநாட்டச் சிறப்பதால்
நபி நூரே இருப்பதால் பிறந்தோமே, மறப்பதா?
அஞ்ஞானத் தூண்டலால் அறியாமை மூண்டதால்
வந்தாரே நபிகளார் இன்ஸானுல் காமிலாய்..!
தியாகத்தின் வாழ்வதால் தித்திப் பூவிழா! (மீலாதுன்னபி விழா)

நபிநாதர் நினைவதால் புகழ்மாலை புனைவதால்
அல்லாஹ்வில் இணைவதா? அல்லாத இணை அதா?
நூராகப் பார்ப்பதா? வேறாகப் பார்ப்பதா?
சீராக யோசித்தால் நேராக நேசித்தால்
திண்டாடத் தேவையா? கொண்டாடவே வா...! (மீலாதுன்னபி விழா)

**பாடல் : இளங்கவி. அ. நைனார் முஹம்மது அன்சாரி M.A., MLIS.,**
**ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி.**
**மெட்டு : கல்யாணத் தேன் நிலா....**

திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன்
அரபிக் கல்லூரி நடத்திய,

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34 ஆம் தலைமுறைத் திருப்பேரர்**

குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித்

**கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல்**

ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின்

**40 ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல்**

**12ஆவது யாஸீனிய் ஆலிம் பட்டமளிப்பு விழா!**

**முதலாவது ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா!** 4

---

மதுரஸாவில் இன்று பட்டம் பெறக்கூடிய ஆலிம்கள் – ஹாஃபிழ்கள் சார்பாக, **மௌலவி. ரஹ்மான் ஷா ஆலிம் யாஸீனிய்** அவர்களின் உரைக்குப் பிறகு, நிகழ்ச்சித் தொகுப்பாளர் **மௌலவி. அல்ஹாபிழ் V.M. முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் :

நிகழ்ச்சியின் முக்கியமான பகுதிக்கு வந்திருக்கின்றோம். தமிழக உலமாக்களின் முன்னோடியாகவும்... தமிழக ஜமாஅத்துல் உலமாவிற்கு ஆலோசனைகள் வழங்கக்கூடிய கண்ணியத்திற்குரிய ஹள்ரத் பெருந்தகையாகவும் சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் பிடிப்பை எல்லோரது மனதிலும் பரவச் செய்து கொண்டிருக்கும் மூத்த உலமாப் பெருந்தகையாகவும்... சங்கைக்குரிய தந்தை நாயகம் என்றழைக்கக்கூடிய குத்புல் ஃபரீத் கௌதுல் வஹீத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் புஹாரி ஷரீஃபிற்கு விரிவுரை எழுதிய இத்ததுத் தராரீ என்னும் ஷரஹ் நூலுக்கு அணிந்துரையை தங்களது எழுத்துகளாலும் சொற்பொழிவாலும் வழங்கிய பாக்கியம் பெற்ற பெருந்தகையாகவும்... திகழ்கின்ற தஞ்சாவூர் அய்யம்பேட்டை சுபுலுஸ்ஸலாம் அரபிக் கல்லூரியின் முதல்வர் மதிப்பிற்குரிய மௌலவி அல்ஹாஜ். பி.எம்.ஜியாவுத்தீன் பாகவி ஹள்ரத் பெருந்தகை அவர்களைப் பேச அழைக்கின்றோம்.

அய்யம்பேட்டை சுபுலுஸ்ஸலாம் அரபிக் கல்லூரியின் முதல்வர் மதிப்பிற்குரிய **மௌலவி அல்ஹாஜ். அல்லாமா ஜியாவுத்தீன் பாகவி ஹள்ரத்** அவர்கள் :

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி தஆலா பரக்காத்துஹு.

கண்ணியமும் மரியாதையும் நிறைந்த இவ்விழாவின் தகுதிமிக்க தலைவர் அவர்களே! இவ்விழாவில் முன்னிலை வகிக்கக்கூடிய மரியாதைக்குரிய அறிஞர் பெருமக்களே! சிறப்பு வருகை புரிந்திருக்கக்கூடிய பாசமிகு தரப்புப் பேச்சாளர்களே! அழகான முறையில் வரவேற்புரை நிகழ்த்தி அமர்ந்திருக்கக் கூடிய எனது அண்டை வீட்டார் பாசமிகு இன்ஜினீயர் எம்.ஜே. இக்பால் அண்ணன் அவர்களே! கண்ணியத்திற்குரிய பெரியோர்களே, சான்றோர்களே... இளம் உலமாப் பெருமக்களே!

நம்மை விட்டும் பிரிந்து சென்ற மாமேதை – மகான் – அறிஞர் பெருந்தகை – அல்லாமா வாப்பா நாயகம் அவர்களுடைய துஆ பரக்கத்தையும் சிறப்பையும் அல்லாஹு ரப்புல் ஆலமீன் என்றென்றும் நமக்குத் தந்தருள்வானாக! நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த துஆவை ஈங்கண் செய்து கொள்வோம். அது, இறைவா! இவர்களால் எங்களுக்குக் கிடைத்து வந்த பலன்களைத் தடுத்து விடாதே; இவர்களுக்குப் பின்னால் எங்களுக்கு எந்தச் சோதனையையும் தந்துவிடாதே!... என்பதாகும்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஒருவர் நம்மை விட்டும் பிரிந்து சென்றபின்னால், இவ்வாறு இரண்டு விஷயங்களைக் கேட்கச் சொன்னார்கள். இதே துஆவை அல்லாஹ்விடத்தில் கேட்டவனாக எனது உரையைத் தொடங்குகின்றேன்.

இன்றைய தினம் ஸனது பெறுகின்ற – பட்டம் பெற இருக்கின்ற ஆலிம்கள் ..... இவர்களைச் சமுதாயத்திற்கு அர்ப்பணிக்கக்கூடிய ஒரு விழா, இந்த நிகழ்ச்சி. ஷைகுமார்களும், குருமார்களும் சீடர்களை உருவாக்குவார்கள். இங்கு இன்று அமர்ந்திருக்கும் சீடர்களாகிய நாமெல்லாம் சேர்ந்து இந்த குருமார்களை உருவாக்கியிருக்கின்றோம். இவர்களுக்கு இன்று அணிவிக்கப்பட்டிருக்கின்ற தலைப்பாகை ஆலிம் என்பதற்கு அடையாளமாக, அணிவிக்கப்பட்டிருக்கின்றது. பொதுவாகச் சொல்வார்கள், பொறுப்புகள் என்பது தலையில் சுமத்தப்படும் என்று. அதேமாதிரிதான் இன்று இவர்களின் தலையில் பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கின்றது. அந்தப் பொறுப்பினை உணர்ந்து நடக்க வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. இவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கின்ற இந்த மேலாடை

– இந்தச் சீருடை, இவர்களெல்லாம் வரஸதுல் அன்பியா – நபிமார்களின் வாரிசுகள் என்பதற்கான ஓர் அடையாளச் சின்னமாக இந்த மேலாடை இவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவர்கள் அணிந்திருக்கக்கூடிய இந்த ஆடை இருக்கின்றதே இது சாதாரணமானது அல்ல. இதன் உள்ளே ஒரு குதுரத்தே இலாஹி ஒளிந்திருக்கின்றது. ஒரு தெய்வீக ஆற்றல் ஒளிந்திருக்கின்றது. அதைத்தான் நமக்கு வரலாறுகள் சொல்லிக் காட்டுகின்றன. நாங்கள் வேலூரிலே ஓதி ஸனது வாங்கிப் பட்டம் பெற்றதருணம், எங்களது உஸ்தாதுப் பெருந்தகை எங்களுக்கு நஸீஹத் செய்தபோது, அழகான ஓர் உதாரணம் சொன்னார்கள். அந்த நிகழ்வு நடந்து சுமார் ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன.

சர்க்கஸ்களிலே குரங்குகளைப் பார்த்திருப்பீர்கள். மனித உடையை அணிவித்து மனிதக் குரங்குகள் போல தோற்றம் ஏற்படுத்தி நடமாட விட்டிருப்பார்கள். மனிதர்களைப் போன்று அது எல்லா சைகைகளையும் அது செய்யும். வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் யாராவது ஒருவர் அதன்மீது கல்லெறிந்துவிட்டால், தனது ஆடையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டு, தனது சுயரூபத்தைக் காட்டிவிடும். இந்த உதாரணத்தைச் சொல்லிவிட்டு, எங்களது உஸ்தாதுப் பெருந்தகை சொன்னார்கள், இளம் ஆலிம்களே, உங்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கின்ற ஆடையை போலியான ஆடையாக நீங்கள் பயன்படுத்தக்கூடாது. வேடதாரிகளுக்குப் பயன்படுத்துவதைப் போலப் பயன்படுத்தக்கூடாது. உண்மையான வரஸதுல் அன்பியாக்கள் – நபிமார்களின் வாரிசுகள் என்பதை அடையாளப்படுத்துவதைப் போல இதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்று சொன்னால், சர்க்கஸிலே மனிதத் தோற்றத்திலே ஆடை அணிவித்து, வேடிக்கை காட்டக்கூடிய அந்தக் குரங்குகள் – வானரங்கள், யாராவது கல்லெறியும்போது சுயரூபத்தை வெளிப்படுத்துவது போல ஒருநாளைக்கு உங்கள் சுயரூபம் வெளிப்படுத்தி விடும். அதனால் உங்கள் தலைமீது தலைப்பாகை என்னும் மிகப் பெரிய பொறுப்பு சமுதாயத்தின் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கின்றது. அதை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள். அதை உண்மையான ஆலிம்களாக நடந்து கொள்ளுங்கள்... என்பதாக எங்களுக்குப் புத்திமதி சொன்னார்கள்.

இந்தமாதிரி அணிந்திருக்கின்ற ஆடைகளினுள்ளே ஒரு குதுரத்தே இலாஹி ஒளிந்திருக்கின்றது என்பதை வரலாறு நமக்குப் பதிவு செய்திருக்கின்றது. நபி யூசுப்

அலைஹிஸ்ஸாம் அவர்கள் அணிந்திருந்த மேலாடையை, நபி யஃகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முகத்தின்மீது போடுங்கள், பார்வை வரும் என்று சொன்னார்கள். இதன் சாத்தியத்தை நினைத்துப் பார்க்க முடியுமா? பார்வை இழந்துவிட்ட – அழுது அழுது கண்கள் பூத்துப் போய்விட்ட யஃகூப் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பார்வை, தெரிய – தெளிய ஆரம்பிப்பதற்குச் சொன்ன வழிமுறை, தன்னுடைய பிரிந்துவிட்ட மகனைப் பற்றிய நற்செய்தி சொல்வதற்காக வந்தபோது, மகன் கொடுத்தனுப்பிய அந்த மேலாடையைக் தகப்பனாரது முகத்திலே போட்டார்கள். பார்வை வந்துவிட்டது. நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம், நாம் அணிந்து கொண்டிருந்த மேலாடையைப் போட்டார்கள் என்று. அதன் உள்ளே, ஒரு குதுரத்தே இலாஹி – ஒரு தெய்வீக ஆற்றல் ஒளிந்திருந்தது. அது வேலை செய்தது. அதனால், பார்வை வந்து விட்டது. அதுபோன்று, நீங்கள் அணிந்திருக்கக்கூடிய இந்த மேலாடை இருக்கின்றதே, இந்த அடையாளச் சின்னம், நீங்கள் வரஸதுல் அன்பியாக்கள் – நபிமார்களின் வாரிசுகள். உங்கள் ஆடைக்குள்ளே ஒரு குதுரத்தே இலாஹி இருக்கின்றது. அதனை நீங்கள் முறையாகப் பயன்படுத்தினால், அது செய்யக் கூடிய வேலையைச் செய்யும் என்று, இதன் மூலம் நமக்குப் பாடம் சொல்லித் தருகிறார்கள்.

இந்தியத் திருநாட்டை ஆட்சி செய்த மாமன்னர்களில் மஹ்மூதுல் ஹஸ்னவீ என்ற மன்னரைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். தமிழ் வழக்கிலே கஜினி முஹம்மது, கஜினி முஹம்மது என்று எழுதுவார்கள். நல்லவேளை, ரஜினி முஹம்மது என்று எழுதாமல் இருந்தான். மஹ்மூதுல் ஹஸ்னவி என்பதே அந்த மன்னரின் அழகான முழுப்பெயர். அவரது ஆட்சிக் காலத்திலே நடந்ததை வரலாறு சொல்லிக் காட்டுகின்றது, அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்னும் ஒரு மகான் வாழ்ந்தார்கள். அல் ஹர்கான் என்பது ஒரு மிகப்பெரிய நகரம். இன்றைக்கு வேறொரு பெயராக அதை மாற்றி விட்டார்கள். அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களைப் பார்ப்பதற்காக, மன்னர் மஹ்மூதுல் ஹஸ்னவீ ஆசைப்பட்டார். தமது பணியாளர்களை விட்டுச் சொல்லி அனுப்பினார். சொல்லி அனுப்பினால், தம்மைப் பார்க்க வருவார் என்ற எதிர்பார்ப்பிலே...! ஆனால், மகான் அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரசவைக்குச் செல்லவில்லை. மன்னருக்குக் கொஞ்சம் வருத்தம், தம்மைத் தேடி வரவில்லையே என்று. மகான் அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், மிகப்பெரிய ஸூஃபி மகான். யாரைத் தேடியும் செல்ல மாட்டார்கள். அதன்பின்னர், மன்னர் மஹ்மூதுல் ஹஸ்னவீ, தமது படை பாரிவாரங்களுடன் மகான் அவர்களின் இருப்பிடத்திற்குச் சென்றார்கள்.

தாங்கள் நேரிலே மன்னரைப் பார்க்க வரவில்லையே என்னும் தமது வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள். அப்போது அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொன்னார்கள், அல்லாஹ்வுக்குச் செய்யக்கூடிய கடமையில் இன்னும் நான் நிறைவு பெறவில்லை. அதனால், உங்களையெல்லாம் சந்திக்க வருவதற்கு எனக்கு நேரமில்லை என்று சொன்னார்கள். கடைசியாக மகான் அவர்களின் சிறப்பைப் புரிந்து கொண்டு, மாமன்னர் மஹ்மூதுல் ஹஸ்னவீ, தாம் ஒரு போருக்குச் செல்லவிருப்பதாகவும், அதன் வெற்றிக்காக துஆ செய்யுங்கள் என்பதாகவும் என்று கோரிக்கை விடுத்தார். அதனையேற்று மகான் அவர்கள், துஆ செய்தார்கள். மன்னர் தமக்கு எதையாவது அன்பளிப்பாகத் தாருங்கள் என்று கேட்டார். மகான் அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், தாங்கள் அணிந்திருந்த மேலாடையைக் கழற்றிக் கொடுத்தார்கள். மன்னர் மஹ்மூதுல் ஹஸ்னவீ, மறுநாள் காலையிலே புறப்படத் தயாரான நேரத்தில், அந்த மேலாடையை மடியிலே வைத்துக் கொண்டு துஆச் செய்தார். இறைவா! ஒரு மகானுடைய மேலாடையை மடியில் வைத்திருக்கின்றேன். அதன் துஆ பரக்கத்தினால் எனக்கு வெற்றியைத் தா... என்பதாக துஆச் செய்துவிட்டு, போருக்குப் புறப்பட்டார்கள். வெற்றியும் கிடைத்தது, அது வேறு விஷயம்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட மகான் அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், என்ன வேலை செய்துவிட்டீர்? இந்த மேலாடையைக் கொண்டு, உனது படைபரிவாரங்கள், இந்த ஊர்க்காரங்கள், இந்த உம்மத்தார்கள்.. எல்லாருக்கும் ஹிதாயத்தைக் கொடு என்று துஆ செய்திருந்தால் அல்லாஹ் கொடுத்திருப்பான். நான் கொடுத்த இந்த மேலாடையை அற்பமான விலைக்கு விற்பனை செய்துவிட்டாயே... துன்யாவுடைய சின்ன வெற்றிக்காக அதை வைத்து துஆ செய்து விட்டாயே... என்று சொன்னார்கள்.

மகான்கள் அணிந்திருந்த அந்த மேலாடை – அதன் உள்ளே ஒளிந்திருந்த அந்த குதுரத்தே இலாஹி மிகப் பெரிய வேலையைச் செய்தது என்பதனை மகான் அபுல் ஹஸனுல் ஹர்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் வரலாற்றின் மூலமாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

அதனால், இளம் ஆலிம்களாகிய நீங்கள் உங்களுக்கு அணிவிக்கப்பட்டு இருக்கின்ற வரஸதுல் அன்பியா – நபிமார்களின் வாரிசுகள் என்னும் இந்த அடையாளச் சின்னத்தை, மிகப்பெரிய நோக்கங்களுக்காகவேண்டி, மிகப்பெரிய தொலைநோக்குத் திட்டங்களுக்காகவேண்டி நீங்கள் பயன்படுத்த வேண்டும். அப்படி

நீங்கள் பயன்படுத்தினால், அதன் உள்ளே ஒளிந்திருக்கக்கூடிய குதுரத்தே இலாஹி கண்டிப்பாக வேலை செய்யும். உண்மையான ஆலிம்களாக நம்மை நாம் பயன்படுத்திக் கொள்கின்றவரை, அல்லாஹுதஆலாவின் துணை என்றென்றும் நமக்குண்டு என்று நிரூபிக்கப்படும் என்று அதன்மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

மற்றொரு விஷயத்தையும் திருக்குர்ஆன் ஷரீஃப் சொல்லிக் காட்டுகிறது. நீங்கள் தொழுகை வீரர்களாக, தொழுகை குன்றாதவர்களாக, அகீதாவில் பிடிப்புள்ளவர்களாக, இலட்சியத்தில் பிடிப்புள்ளவர்களாக உங்கள் வாழ்நாளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

நபி யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அழகிய சரிதையிலே அவர்கள் செய்த துஆவினை, திருக்குர்ஆன் ஷரீஃபிலே அல்லாஹுதஆலா பதிவு செய்திருக்கின்றான். அவர்கள் ஒரு தவறுக்காக அழைக்கப்பட்டார்கள். ஆசை வார்த்தை காட்டப்பட்டார்கள். மிரட்டப்பட்டார்கள். அந்த நேரத்திலே நபி யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்த துஆ, நமக்கெல்லாம் ஒரு பாடம்.

நபி யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், எந்தப் பாவத்திற்கு என்னை அழைக்கின்றார்களோ, எந்தத் தவறுக்கு என்னைத் துணைபோகச் சொல்கின்றார்களோ, அதை விடச் சிறை வாழ்க்கையே எனக்குச் சிறந்தது என்பதாக துஆச் செய்தார்கள். அந்தமாதிரியே சிறை வாழ்க்கையையும் அனுபவித்தார்கள்.

நாம் கொள்கைக் குன்றாக இருப்பதற்காக – இலட்சியத்தில் பிடிப்பாக இருப்பதற்காக, சிறைவாசம் கிடைத்தாலும் கூடப் பரவாயில்லை என்கிற ஒரு பாடத்தை, ஒரு முன்னோடியை நமக்கு நபி யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வரலாற்றின் மூலமாக அல்லாஹுதஆலா சொல்லிக் காட்டுகின்றான்.

கண்மணி ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலம். நபித் தோழர்களில் சுஹைபே ரூமி ரலியல்லாஹு அன்ஹு என்றொரு ஸஹாபி. ரோமாபுரியிலிருந்து மக்கமா நகருக்கு வந்து, ஹள்ரத் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமை பெருமைகளை யெல்லாம் தெரிந்து, ஈமான் கொண்டவர் சுஹைபே ரூமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

அவரது வரலாற்றை இப்படிச் சொல்கிறார்கள். அவர் ஒரு பொற்கொல்லர். நகைகளையெல்லாம் செய்து விற்பனை செய்யக்கூடிய பொற்கொல்லர். அவர் மக்கா வந்து, நகைகளையெல்லாம் செய்து விற்றுப் பிழைத்துக் கொண்டிருக்கின்றார். கண்மணி ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற பிறகு, குறைஷியர்கள் எல்லாம் அவரிடத்து வந்து ஆசை வார்த்தை காட்டினார்கள். சுஹைப், நீங்கள் வெளியூர்க்காரர். எங்கள் ஊருக்குப் பிழைப்புத் தேடி வந்தீர்கள். உங்களிடம் உள்ள செல்வம், செல்வாக்கு எல்லாம் எங்கள் ஊர் மக்களால் கிடைத்தது. அதனால், முஹம்மது நபியைப் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பின்பற்றி, மதீனாவிற்குப் போக வேண்டாம். இங்கேயே தங்கிவிடுங்கள். உங்களிடத்திலே கொடுத்த நகை ஆர்டர்களையெல்லாம் விற்றுத் தந்து விடுகின்றோம். எதையுமே நீங்கள் எங்களுக்குத் திரும்பத் தரவேண்டாம். நீங்களே சொந்தமாக வைத்துக் கொள்ளுங்கள் என்பதாகப் பொருளாதாரத்தைக் காட்டி ஆசை வார்த்தை காட்டினார்கள். அதற்கு அந்த சுஹைபே ரூமி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் சொன்னார்கள்: இல்லை, இல்லை. எனக்கு வந்திருக்கக்கூடிய நகை ஆர்டர்களையெல்லாம் முறையாகத் தயார் செய்து உரியவர்களிடத்தில் அமானிதமாக ஒப்படைத்துவிட்டு, நான் மதீனாவிற்குப் போகத்தான் போகிறேன். ஹள்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று சேரத்தான் போகின்றேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டார். மறுநாள் வந்து, குரைஷிகள் மிரட்டல் தொனியில் பேசினார்கள். சுஹைப், நீங்கள் எங்கள் ஊருக்குப் பிழைக்க வந்தவர். உங்களிடத்தில் உள்ள செல்வம் செல்வாக்கெல்லாம் எங்கள் ஊர் காசு. அதனால், எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு, உடுத்திய துணியோடு உம்மை அனுப்பிவிடுவோம், அதனால், நீங்கள் மதீனாவுக்குப் போகாதீர் என்று மிரட்டினார்கள். அதற்கு, சுஹைபு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பரவாயில்லை, என்னிடமிருந்து எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். எனக்குத் தேவை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாம். திட்டமிட்டபடி, நான் மதீனாவிற்குப் போகத்தான் போகிறேன், என்று சொல்லிவிட்டார். விலை பேசினார்கள், மிரட்டிப் பார்த்தார்கள்... ஆனாலும் அவர் ஈமானை விடுவதாக இல்லை... கொள்கையை விடுவதாக இல்லை. தமது இலட்சியத்தில் பின்வாங்குவதாக இல்லை... கொள்கையில் குன்றாக நின்று தமது காரியத்தைச் சாதித்தார். தமது ஈமானைப் பாதுகாத்துக் கொண்டார்.

இதுவெல்லாம் ஆலிம்களான நமக்குச் சிறந்த பாடம். எவ்வளவு பெரிய இன்னல்கள், இடையூறுகள், தொல்லை துன்பங்கள், ஆபத்து சாபத்துகள், சமுதாயத்தில் நாம் நடமாடும்போது ஏற்படக்கூடிய தொந்தரவுகள், ஆயிரமாயிரம் இருக்கலாம். அத்தனையையும் எதிர்கொள்ளக்கூடிய மனோதிடத்தை – அந்த ஈமானை – உரத்தை நமது முன்னோர்கள் நமக்குத் தந்திருக்கின்றார்கள். அதனால், இளம் ஆலிம்களான நீங்கள் கொள்கையில் குன்றாக, இலட்சியவாதிகளாக வாழ

வேண்டும் என்பதை ஹள்ரத் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்து வரலாறு நமக்குப் பாடம் சொல்லித்தருகிறது.

இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. நாற்பெரும் மதுஹபுகளில், மாலிக் மதுஹபுடைய ஏற்படுத்தியவர்கள் இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தில் அப்பாஸிய மன்னர்களில் ஒருவராக இருந்த மன்சூர் என்பாருக்கு எதிராக, இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஒரு தீர்ப்பை ஃபத்வாவை வெளியிட்டார்கள். மன்னருக்கு எதிராக ஃபத்வா வழங்கியமைக்காக, இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்கு 80 சாட்டையடி வழங்கத் தீர்ப்பளிக்கப்பட்டது. தண்டனையை நிறைவேற்றுவதற்காக, இழுத்துச் செல்லப்படும்போதுகூட இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், சட்டத்தின் நுணுக்கங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டே போகிறார்கள். தமக்குத் தண்டனை வழங்கப்பட உள்ளதே, தம்மைக் கைது செய்து போகிறார்களே, நம்மை என்ன பாடுபடுத்துவார்களோ என்பன பற்றியெல்லாம் அணுவளவும் கவலைப்படவில்லை. மார்க்கத்தைப் பற்றி, ஷரீஅத்தைப் பற்றிய கவலையில் மூழ்கி, தண்டனை வழங்க அழைத்துச் செல்லப்படும்போது, நடந்து செல்லும்போது கூட மஸ்அலாக்களைப் பற்றி விவாதித்துக் கொண்டு போனார்கள் என்பதை இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் வரலாறு நமக்குச் சொல்லிக் காட்டுகின்றது.

இளம் ஆலிம்களாக உருவெடுத்துள்ள நீங்கள் உங்களிடத்திலே மிகச் சிறந்த கொள்கைப் பிடிப்பை, மிகச்சிறந்த ஈமானிய உரத்தை, இலட்சியத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹு ரப்புல் ஆலமீன் அதன் மூலமாகத்தான் உயர்வைத் தருவான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், உங்களிடத்திலே இருக்கக்கூடிய கல்வியறிவோ, உங்களுடைய அறிவாற்றலோ நம்மை உச்சத்திற்குக் கொண்டு போகாது. அல்லாஹ்வுடைய நெருக்கத்திற்குக் கொண்டு போகாது. உங்களிடமுள்ள ஈமானும் இறையச்சமும் மட்டுமே உங்களை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லும் என்பதை என்றென்றும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்லியதைப் போன்று நடந்து கொள்ளுங்கள். இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொன்னார்கள்: எனக்கு மனப்பாட சக்தி – ஞாபக சக்தி குறைவாக உள்ளது என்பதாக என்னுடைய உஸ்தாதிடத்திலே சொன்னேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், பாபங்களை விட்டுவிடுங்கள், தப்புத் தவறுகளைச் செய்வதை

விட்டுவிடுங்கள், அதன்பின் தானாக ஞாபக சக்தி வந்துவிடும். படிப்பதெல்லாம் ஞாபகத்தில் நிற்கும் என்றார்கள். அவர்கள் அவ்வாறு சொன்னதன் உள்ரங்கம் என்னவென்று தெரியுமா? நீங்கள் கற்றிருக்கக்கூடிய இல்மு என்னவென்று தெரியுமா? அல்லாஹ்வுடைய பேரொளியாகும். அல்லாஹ்வுடைய ஒளி, அல்லாஹ்வுடைய ஜோதி, பாபிகளுக்குக் கொடுக்கப்படாது. அதனால், பாபங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள். தானாகவே உங்களுக்கு ஞாபக சக்தி வந்துவிடும் என்பதாக இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்கு அவர்களது ஆசிரியப் பெருந்தகை சொன்ன புத்திமதியை அவர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள்.

ஆக, அல்லாஹு ரப்புல் ஆலமீன் நமக்குத் தந்திருக்கக்கூடிய இல்மு என்னும் நூரைப் பாதுகாப்பது, அதன்மூலம் மக்களுக்கெல்லாம் வெளிச்சத்தைப் பாய்ச்சுவது, இதெல்லாம் உங்களது தலையாய கடமையாக இருக்க வேண்டும். வல்ல ரஹ்மான் உங்கள் சேவையை கபூல் செய்து, இந்த உம்மத்திற்கு மிகச் சிறந்த வழிகாட்டிகளாக உங்களை அல்லாஹுதஆலா அங்கீகரிப்பானாக என்று துஆச் செய்தவனாக, வாய்ப்பளித்த சகோதரப் பெருமக்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

அதைத் தொடர்ந்து, நிகழ்ச்சித் தொகுப்பாளர் மௌலவி அல்ஹாஃபிழ் V.M. முஹம்மது ஹஸன் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்:

ஹள்ரத் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் அவர்கள் மூலமாக இந்தச் சமுதாயத்திற்குச் சேவைகள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்னும் துஆவைப் பணிவோடு கேட்டவனாக, அடுத்து நாம் சொற்பொழிவாற்ற அழைக்க இருப்பவர்கள், பார்ப்பதற்கு எளிமையானவர்கள், பழகுவதற்கு இனிமையானவர்கள், பணிவுக்கு உதாரணமானவர்கள், நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அன்புக்கு உரித்தானவர்கள், இவர்கள் சத்தியத்தைச் சமரசம் இல்லாமல் பேசுவார்கள். அசத்தியத்தை சமயோஜிதத்தோடு போக்குவார்கள். அத்தகைய கண்ணியத்திற்குரிய அல்ஹாஃபிழ் அல்ஹாஜ். அபுத்தலாயில், அபுல் பயான் அஸதுல்லாஹ் டாக்டர். M.ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி M.A., Ph.D., ஹள்ரத் அவர்களைச் சிறப்புரை நிகழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தொடர்ந்து பேசுவார்கள்)

நெகிழ்ச்சித் தொகுப்பு :

**இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி,**

**M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி**



# மதுரஸா நன்கொடை



**திண்டுக்கல்**

1. சென்னை மும்தாஜ் ஆஷிப் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு புர்தா ஷரீப் ஓதி துஆ செய்ய ரூ. 500/-ம்,

2. மதுரை K. புதூர் சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/-ம்,

3. மதுரை S. ஜரினா பேகம் அவர்களின் கணவர் மர்ஹூம் சாகுல் ஹமீது என்ற ராஜாங்கம் அவர்களின் வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/-ம்,

4. மன்னார் குடி நஜிய்யா அப்துல் காதர் பிறந்த நாளை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 2000/-ம்,

5. காரைக்கால் அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் விரைவில் தீர்ந்து குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500/ம்,

6. சென்னை S. சர்மிளா உசேன் குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ நிய்யத் செய்து துஆ செய்ய காலை சிறபப உணவுக்கு ரூ. 5000/

7. கீழக்கரை ஆய்ஷத் மாபிதா பிள்கைளுக்கு சிறப்பாக திருமணம் முடிந்து நல்வாழ்விற்க்கும் 2 பிள்ளைகளுக்கு நிரந்தர வேலை கிடைக்க நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500/-ம்,

8. ஆவூர் நபீஃல் அஹமது வேலை கிடைத்ததை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/-ம்,

9. கம்பம் Dr. M. மதிஹா D/o M.A. முஹம்மது ஆஷிக் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

10. எலந்தங்குடி ஷாஜஹான் நிய்யத் நிறைவேற வேண்டி துஆ செய்ய ரூ. 510/-ம்,

11. காந்திகிராமம் N. பத்தூல் குடும்பத்தினர் சதக்கா (200 + 500) ரூ. 700/-ம்,

12. திண்டுக்கல் ஹாஜி J. முஹம்மது ரஹ்மத்துல்லா அவர்களின் பேரன் ஜயீம் அலி ஷைகு நாயகம் அவர்களின் பரிபூரண பாதுகாப்பில் எந்தவித ஆபத்துமின்றி சந்தோஷமாக வாழ பதுறு மௌலிது ஓதி துஆ செய்ய உணவுக்காக ரூ. 5000/-ம்,

13. நக்கம் பாடி – பரக்கத் நிஷா மகளுக்கு சாலிஹான மணமகன் அமைந்து திருமணம் நடைபெற துஆ செய்ய ரூ. 500/– உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500/–ம்,

14. மதுக்கூர் கலீஃபா M. முஸ்தபா அவர்களின் பேரன் முகம்மது முன்ஷித் முதலாம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு நோயற்ற நீண்ட நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 1000/ ம்,

15. மேலத்திருப்பந்துருத்தி M. ஷேக் அப்துல் ரஹ்மான் S. நபிளா சுஹாத் 15.9.2024 திருமணத்தை முன்னிட்டு சிறப்பாக நடைபெற மணக்கள் ஹக்கில் துஆ செய்ய ரூ. 1000/ம்,

16. சென்னை A. ஆரிபா ரிதா பாத்திமா D/o அஸ்லம் கான் ஹாஜிரா பானு 5 ஆம் ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 1000/ம்,

17. மடத்துக்குளம் S.P .சேக்அப்துல்லா சாலிஹா பீவீ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 700/ –ம்,

18. கிளியனூர் முஹம்மது ஃபஹிம் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 500/–ம்,

19. புதுக்கோட்டை N. ஜமால் முஹம்மது நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/–ம்,

20. மேலத்திருப்பூந்துருத்தி S.A. ஹாஜா நஜ்முதீன் துஆ செய்ய ரூ. 2400/–ம்,

21. பாக்கம் போட்டூர் ரஹ்மத் நிஷா பஜ்ருல் ஹக் துஆ செய்ய உணவுக்காக ரூ. 2000/–ம்,

22. திண்டுக்கல் Er. A. அப்துல் வஹாப் அவர்கள் பரிபூரண சுகத்துடன் வாழவும் குடும்பத்துடன் பரிபூரண சுகத்துடன் வாழவும் துஆ செய்ய ரூ. 1000/–ம்,

23. திண்டுக்கல் A. ஜைனப் ஜுனைதா D/o Er.A. அப்துல் வஹாப் பரிபூரண சுகத்துடன் வாழவும் தன் குடுமபத்துடன் நலமுடன் வாழவும் மகன்கள் நன்றாக படிக்கவும் துஆ செய்ய ரூ. 1000/–ம்,

24. சென்னை மர்ஹூம் A.M. அலியார் அவர்களின் வருட பாத்திஹாவை முன்னிட்டு குர்ஆன் ஷரீப் ஓதி ஹத்தம் செய்து துஆ செய்ய ரூ. 500/ம்,

25. காரைக்குடி S. மும்தாஜ் பேகம் அவர்கள் உடல் நலம் பரிபூரண சுகமாக நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/– மற்றும் ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 1000/–ம்,

26. பாக்கம் கோட்டூர் ஃபரீஜான் துஆ செய்ய ரூ. 500/–ம்,

27. சென்னை முஹம்மது யூசுப் மஹ்முதா துஆ செய்ய உணவுக்காக ரூ. 3000/–ம்,

28. திண்டுக்கல் சஹறா் பானு சீனி அப்துல் காதர் மகள்கள் சமீஹா பர்கானா – சாஜிதா பர்வீன் இருவருக்கும் அகீகா நிறைவேற்றி சிறப்பு உணவு வழங்கி துஆ செய்ய ரூ. 30000/–ம்,

**மதுக்கூர்**

நாராண்டியார் **K.** செய்யது அகமது மகன் **S.** ஃபாஸில் அகமது நல்ல விதமாக படிப்பு முடித்து நல்ல வேலை கிடைக்க வைத்த நிய்யத் நிறைவேறியதற்காக துவா செய்ய ரூ. 10,000/–ம்,

நாராண்டியார் **K.** செய்யத் அகமது நிய்யத் நிறைவேறியதற்காக ரூ. 500/–ம்,

**A.** முகம்மது பாரூக் **M.** ஹலிமா பானு இவர்களின் மூத்த மகனார் அப்துல் கபூர்கான் பிறந்த நாளை முன்னிட்டு (23.08.24) முன்னிட்டு நீண்ட ஆயுளுக்கும் நன்றாக படித்து வர சங்கை மிகு செய்கு நாயகமவர்களின் பாதுகாப்பு கிடைக்கவும் துஆ செய்ய ரூ. 1000/–ம்,

ஓ.பி.யு.எம். ஹாஜா அலாவுதீன் தமது நேர்ச்சை நிறைவேறியதை முன்னிட்டு நன்கொடை செய்ய ரூ. 5000/–ம்,

ஓ.பி.யு.ஆர்.பஷீர் அகமது மாத சந்தாவாக பிள்ளைகளின் நல்வாழ் வுக்கு துஆசெய்ய ரூ.1000/ம்,

ஷம்ஸியா அக்பர் அலி மதரஸா பிள்ளைகளின் காலை உணவிற்காக நன்கொடை ரூ. 5000/ம்,

பக்தர் ஒருவர் தனது தாயின் ஆபரேசன் முடிவடைந்த நிலையில் உடல் நல பூரண சுகத்துக்கு துஆ செய்ய நன்கொடை ரூ. 10000/–ம்,

ஏ.அல்சாகுல் ஹம்தான் சகோதரி அல்மாஸ் ஹஸ்ஸான் – அஹ்மது அப்துல் காதிர் திருமண (10.8.24)த்தை முன்னிட்டு மதியவிருந்துக்கு நன்கொடை ரூ. 15000/–ம்,

எம். பரீஜான் பீவி தமது உடல் பூரண நலம் பெற துஆ செய்ய ரூ. 10001/–ம்,

பாடகர் எம். முஹம்மது தாவூது உண்டியல் மூலம் சேமிப்பு ரூ. 2810/–ம்,

எஸ்.இ. உஸ்மான் அவர்கள் மனைவியின் உடல்நல பூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 1000/–ம்,

டி.எஸ்.ஏ.எம். அப்துல் வாஹித் அவர்களின் உடல்நல பூரண சுகத்திற்கு குர்பானி கொடுத்து துஆ செய்ய ரூ. 12000/–ம்,

டாக்டர். எம்.ஏ. சமீர் முஹம்மது யூசுப் அவர்களின் உடல் பூரண சுகத்திற்கு குர்பானி கொடுத்து துஆ செய்ய ரூ. 12000/–ம்,

எம். அப்துல் அஹத் தமது நாட்ட தேட்டங்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 14700/–ம்,

எம். முஹம்மது யாகூப் தன் குடும்பம் பிள்ளைகளின் நீண்ட ஆயுளுக்கும் நோயற்ற நல்வாழ்வுக் கும் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

**மன்னார்குடி A.S. அப்துல் சலாம் ஹக்கிய்யுல் காதிரிய் (பேங்க்பாய்) அவர்களின் மகனாருக்கு சாலிஹான மணமகள் அமையவும் - மகளாருக்கு- சாலிஹான மணமகன் அமையவும், திருமணம் நல்ல விதமாக விரைவில் நடைபெற துஆ செய்ய மறைஞானப் பேழைக்கு நன்கொடை ரூ. 1000/-ம்,**

**வழங்கினர். வழங்கியவர்களுக்கு வாப்பா நாயகம் அவர்களின் பொருட்டால் அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை நிறைவேற்றுவானாக!**

---

■ அனமின் நூரில்லாஹ் வகுல்லுஷைஇன் மின் நூரீ. இந்த ஹதீது தொடர் வாக்கியத்தின் இரு பகுதிகளிலுமுள்ள (மின்) நின்றும் என்ற சொல்லானது (ஜாயிதி) அதிகமானது என்று கூறுகிற சத்திய அறிஞர்களும் உள். அப்படியானால் அந்தத் தொடர் வாக்கியம் நான் அல்லாஹ்வின் ஜோதி. வஸ்துக் களடங்கலும் எனது ஜோதி என்றாகும். அல்லாஹ்வானவன் வானங்களுடையவும் பூமியுடையவும் ஜோதியாயி ருக்கிறான் என்று ஹக்கு கூறுகிறது. முடிவாகக் கூறுமிடத்து அல்லாஹ்வானவன் ஒளியாகும். சம்பூரண தோன்றுதுறையாகிய முஹம்மதிய சந்நிதானமும் ஒளியாகும். மற்ற வஸ்துக்களும் ஒளியாகும். எனவே ஹக்கு அதுகொண்டு பிரதிபிம்பிக்கும் ஒளியாகும்.

■ பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கனவில் கண்ட அனுபவம்.

கண்டிக்குச் சென்றேன். முஸ்லீம் ஹோட்டலில் தரித்திருந்தேன். அங்கு 1354-ம் வருடம், துல்கஃதா, பிறை 3, திங்கட்கிழமை ஸுப்ஹுக்கு முன் கனவில் எனது பாட்டனார், எனது உயிருக்குயிரானவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டேன். அவர்கள் கால்களில் விழுந்து அழுதேன். அவர்கள் எனக்குச் சில கட்டளைகளை யிட்டார்கள். நான் அடைய விரும்பிக் கொண்டிருந்தவற்றை அடைந்தேன். இதற்குப் பின் எனது பாட்டனார் அவர்களைப் பன்முறை கண்டேன். அவர்கள் சோதியைக் கணமும் ஓய்வின்றிக் காண்கிறேன். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியன.

*(குத்புல்ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி)*

# சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா
# அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி)
# அவர்கள் தங்கள் பாட்டனார் மீது பாடியது

---

**நபிகள் நாயகம் புகழ்ப்பா - 12**

செஞ்சுருட்டி ஆதிதாளம்

*(பல்லவி கண்ணிகள்)*

*வணங்கும் யாஸீனுக்கிணங்கும் புண்ணியரே*
*வல்லானின் தூதர் வாருமென்களை தீருங் கண்ணியரே*
*தினம் வாகுபெற்றுறவாக நற்றவ பாகமுற்று நின்*
*யோகம் பெற்றிட - வரம் பெறப் பதந்தருங் குகநாதா*
*என்னாசைப் பொக்கிஷம் வாரிதனங்கள் தாரும்*
*பொற்பாதா (வணங்கும்)*

*மதிக்குஞ்சுவனப் பதிக்குமிந்திரரே - அமரர்*
*கொண்டாடும்*
*மாமணங் கமழ் நேம சுந்திரரே*
*கருமங்களிற்றிருத் தங்களும்பன*
*மங்களம் பெற தங்களின் துதி*
*மதீன மாநகர்க் கதிபதி வாசா*
*தேவி கதீஜா மாசற மணம் புரி விசுவாசா*
*(வணங்கும்)*

*தருமசிந்தையின் பெருமை சிங்காரா*
*சேயன் யாஸீனை தாபரஞ் செய்யுந்தீப ஒய்யாரா*
*தனந்தாரு மெந்தனை சேரு முந்தனை*
*கோரும் சிந்தனை பாரும் வந்தெனை*
*தருவளநிறை பெருமறை நேமா*
*ஏழை என்னாசை தாமரைப் பதமேபெற சீமா*

*(வணங்கும்)*

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee